Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 5

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

14 ரபிய்யுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி    1 தப்லீக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

1 பிப்ரவரி 2018

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எதுவரை உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்ப்பதில்லையோ அதுவரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேறுவதில்லை. மேலும், உண்மையான ஓரிறைமை அவனது உள்ளத்தில் நுழைவதில்லை. மேலும், உண்மையான உறுதியுடன் அவன் இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும், இந்த தூய்மையான முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

உறுதியாக புரிந்து கொள்ளுங்கள்! ஓரிறைமையும் கூட நபியை பின்பற்றுவதன் மூலமாகவே கிடைக்க முடியும். உதாரணமாக, நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்கள் மற்றும் தீய மார்க்கத்தை உடையவர்களுக்கு ஆயிரக்கணக்கான வானத்து அடையாளங்களைக் காட்டி அவர்களை இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்கள். மேலும், இப்போதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான முறையிலும் முழுமையான முறையிலும் பின்பற்றுபவர்கள் இந்த அடையாளங்களை நாத்திகர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றனர். இதுவே உண்மையான விஷயமாகும். எதுவரை உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்ப்பதில்லையோ அதுவரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேறுவதில்லை. மேலும், உண்மையான ஓரிறைமை அவனது உள்ளத்தில் நுழைவதில்லை. மேலும், உண்மையான உறுதியுடன் அவன் இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும், இந்த தூய்மையான முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 121)*

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

### முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.

✦ 44 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ 20,048 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ 32 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான إِسْمَعُوا صَوْتَ السَّمَاءِ جَاءَ الْمَسِيحُ جَاءَ الْمَسِيحُ *MTA* இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி *MTA* -வில் ஒளிபரப்பப்பட்டது

காதியான் ஆண்டு மாநாடு "புஸ்தானே அஹ்மது" என்ற பெயரிலுள்ள விரிவான மாநாட்டுத் திடல் வளாகத்தில் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29, 30, 31 ஆகிய தேதிகளில் நடைபெற்று, சிறப்பான முறையில் அதன் நிறைவை எட்டியது. மாநாட்டிற்கான ஆயத்தம் வெகு நாட்களுக்கு முன்னதாகவே ஆரம்பமாகி இருந்தது. வழிப் பாதைகள், தெருக்கள் மற்றும் முஹல்லாவைச் சுத்தம் செய்கின்ற பணிகள் நடைபெற்றன. மின்சாரம் மற்றும் ஒளிக்கான ஏற்பாடு செய்கின்ற துறையின் சார்பாக சாலைகளிலும் தெருக்களிலும் ஒளிவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்தது. பெஹஸ்தி மக்பரா, தாருல் மஸீஹ், மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா மற்றும் மினாரத்துல் மஸீஹ் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்து. அதன் காட்சி மிகவும் அழகாகவும் உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் இருந்தது. ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விருந்தினர்களின் வருகை ஆரம்பமாகியிருந்தது. ஆண்டு மாநாட்டின் நாட்கள் அருகில் வர வர காதியான் தாருல் அமானின் பொலிவு அதிகரித்தது. எதுவரையென்றால் மாநாட்டின் நாட்களில் விருந்தினர்களின் பெருந்திரளான கூட்டம் காரணமாக அதன் பொலிவு மேலும் அதிகரித்து விட்டது.

### பணியாளர்கள் தொடர்பான ஆய்வும் மாநாட்டிற்கான ஏற்பாடுகளும்

25 டிசம்பர் 2017 -ல் மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் நாஸிர் அ.்.லா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்கள் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அனுமதியுடன் ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி என்ற நிலையில் பணியாளர்கள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டவாறு மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பார்வையிட்டார்கள்.

காலை சரியாக 10.30 மணிக்கு மாநாட்டுத் திடலான புஸ்தானே அஹ்மத் -ல் பணியாளர்கள் தொர்பான ஆய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஹுஸூர் அவர்களின் பிரதிநிதி பல்வேறு துறைகளைச் சார்ந்த நாஸிம்கள் மற்றும் விருந்தோம்பல்

(தொடர்ச்சி 14 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கள் மற்றும் வரலாற்று சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களின் உயர்வான அந்தஸ்து, அவர்களது ஈமான், கலப்பற்ற தன்மை, மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் செய்த நற்செயல்களின் உயர்வான தகுதி பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் சஹாபாக்களின் ஒளிமயமான முன்னுதாரணங்களின் ஒளியில் ஜமாஅத் சகோதரர்கள் அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி நடந்தவாறு அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்லுமாறு அவர்கள் வலியுறுத்திக் கூறிய போதனைகள்**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**15 டிசம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **15 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ ۙ رَّضِيَ اللّٰهُ عَنْهُمْ
وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِيْ تَحْتَهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَآ اَبَدًا ؕ ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ

இடம் பெயர்ந்து சென்றவர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர்களுள் முதலாவதாக முந்திக் கொண்டவர்கள், மேலும் அவர்களை நன்முறையில் பின்தொடர்ந்தவர்கள் ஆகியோரிடத்து அல்லாஹ் மன நிறைவு அடைந்துள்ளான். அவர்களும் அவனிடம் திருப்தி அடைந்துள்ளனர். மேலும் அவன் அவர்களுக்காக கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் தோட்டங்களை ஏற்படுத்தியுள்ளான். அவர்கள் அதில் என்னெற்றும் வாழ்ந்து வருவர். இது மாபெரும் வெற்றியாகும். **(9:100)**

இந்த வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்கள் முந்திச் செல்லக் கூடியவர்களாக இருந்தனர். ஆன்மீக அந்தஸ்த்தில் உயரத்தில் உள்ளவர்களாக இருக்கின்றனர். மேலும் ஈமானிய தரத்தில் மேலும் அல்லாஹ்வினுடைய போதனைகளுக்கேற்ப அமல் செய்பவர்களில் மற்ற எல்லாரையும் பின்னுக்குத் தள்ளக் கூடியவர்களாக உள்ளனர். இவர்கள் முதலில் ஈமான் கொண்டார்கள். மற்றவர்களுக்கும் பின்னால் வருபவர்களுக்கும் தனது செயல்களை முன்னுதாரணமாக விட்டுச் சென்றுள்ளனர். மற்றவர்கள் அவர்களை பின்பற்றும் வகையில் நடந்துள்ளனர்.

எனவே, அல்லாஹ் சஹாபாக்களை பின்னர் வரக்கூடியவர்களுக்கு பின்பற்றத் தகுந்த முன்மாதிரியாக ஆக்கியுள்ளான். அல்லாஹ் அவர்களின் ஈமானிய தரம் மற்றும் அவர்களின் செயல்களில் திருப்தியடைந்ததாக அறிவிப்பு செய்துள்ளான். மேலும் அவர்களும் கூட அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதையே தனது வாழ்வின் நோக்கமாக ஆக்கிக் கொண்டனர். எந்நிலையிலும் அவர்கள் அல்லாஹ்வின் நன்றியுடைய அடியார்களாக இருந்தனர். எனவே அல்லாஹ் கூறுகின்றான். எவரெல்லாம் இந்த முன்மாதிரியின் படி நடப்பார்களோ, ஈமான், கலப்பற்ற தன்மை, விசுவாசம் மற்றும் நற்செயல்கள் செய்வார்களோ அவர்கள் அல்லாஹ்வினுடைய அருட்களை பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். அல்லாஹ் சஹாபாக்களின் உயர் அந்தஸ்த்து தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கூறியவாறு சஹாபாக்களை பின்பற்றுவதை நேர்வழி பெறுவதற்கான காரணியாக ஆக்கியிருக்கின்றான்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற கேட்டுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சஹாபாக்களின் கருத்து வேறுபாடு தொடர்பாக நான் அல்லாஹ்விடம் கேட்ட போது அல்லாஹ் எனக்கு வஹி அறிவித்தான். முஹம்மதே! (ஸல்) எனது பார்வையில் உனது சஹாபாக்களின் அந்தஸ்து வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் போன்றவையாகும். அவற்றில் சில, சிலவற்றை விட அதிக ஒளியைக் கொண்டதாக உள்ளன. ஆனால் ஒளி அனைத்திலும் உள்ளது. எனவே எவர் உனது ஏதேனும் ஒரு சஹாபியை பின்பற்றினாரோ எனது பார்வையில் அவர் நேர்வழி பெற்றவராக இருப்பார். (அல்லாஹ்வின் பார்வையில் அவர் நேர்வழி பெற்றவராக இருப்பார்). (மிர்காதுல் மஃபாதிஹ் ஷரஹ் மிஸ்காத்து தொகுதி 11 பக்கம் 162-163. சஹாபா ஹதீஸ் 6018. பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2001 -ல் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதையும் கூறினார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது சஹாபாக்கள் நட்சத்திரங்களை போன்றவர்கள் ஆவார்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழி பெற்று விடுவீர்கள்.

ஆக அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கு இத்தகு உயர் அந்தஸ்த்தை வழங்கியுள்ளான். அவர்களில் ஒவ்வொருவரும் நமக்கு வழிகாட்டுபவர்களாக உள்ளனர்.

சஹாபாக்களின் உயர் அந்தஸ்த்து மேலும் அல்லாஹ் அவர்களோடு திருப்தி அடைந்தது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் வழியில் எப்படிப்பட்ட உண்மைத் தன்மையை வெளிப்படுத்தினார்கள் என்றால் அவர்களுக்கு ரலியல்லாஹு அன்ஹும் வரலூ அன்ஹு அதாவது, அல்லாஹ் அவர்களோடு பொருந்திக் கொண்டான். மேலும் அவர்களும் அல்லாஹ்வோடு திருப்தி அடைந்தனர் என்கின்ற ஓசை கேட்டது. இது தான் சஹாபாக்கள் அடைந்த மிக உயர்வான அந்தஸ்தாகும். அதாவது அல்லாஹ் அவர்களோடு திருப்தி அடைந்தான். மேலும் அவர்கள் அல்லாஹ்வோடு திருப்தி அடைந்தனர். அந்த அந்தஸ்தினுடைய சிறப்பம்சங்களை, முழுமைத்தன்மையை வார்த்தைகளில் விவரிக்க முடியாது.

அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வோடு திருப்தி அடைவது என்பது ஒரு மனிதரின் வேலையல்ல. மாறாக, இது தவக்கல் மற்றும் திருப்தியடைவதின் உயர் தரமாகும். அந்த இடத்தை அடைந்து மனிதனுக்கு இறைவனிடத்தில் எவ்வித முறையீடும் இருப்பதில்லை. மேலும் அல்லாஹ் தனது அடியானோடு திருப்தியடைவது என்பது அடியானின் உண்மை, விசுவாசம் மேலும் உயர் தரமான தூய்மை மேலும் முழுமையான கட்டுப்படுதலை வெளிப்படுத்துகின்றது.

அவர்கள் கூறினார்கள்: இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், சஹாபாக்கள் இறை ஞானத்தின் அனைத்து படித்தரங்களையும் அடைந்திருந்தார்கள்.

இதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் உங்களுடைய உள்ளத்தை தூய்மையாக்குங்கள். இறைவன் உங்களோடு திருப்தியடைய வேண்டும். (அன்னார் அறிவுரை கூறுகின்றார்கள்). நீங்கள் அவனோடு திருப்தி அடையுங்கள். அதாவது அல்லாஹ்வோடு எந்த முறையீடும் செய்யாதீர்கள். மேலும் அல்லாஹ்வை திருப்தியடையச் செய்வதற்கு தனது உண்மை, விசுவாசம் ஆகியவற்றை முழுமையடையச் செய்ய வேண்டும். மேலும் தனது தூய்மையின் தரத்தையும் உயர்வாக எடுத்துச் செல்ல வேண்டும். கட்டுப்படுதலின் உயர் தரத்தையும் நிலைநாட்ட வேண்டும். இந்த விஷயங்கள் இருக்கும் என்றால் இறைவன் உங்களோடு திருப்தி அடைவான். நீங்கள் அவனோடு திருப்தி அடையுங்கள். பிறகு அவன் உங்களது உடலிலும், உங்களது பேச்சிலும் அருளை வைத்து விடுவான். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 139-140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) அதாவது இந்த அந்தஸ்தைப் பெறும்போது அருளும் கிடைக்கும்.

எனவே, நாம் இறை நெருக்கத்தை பெற விரும்பினால் சஹாபாக்கள் நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றார்கள். அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தென்பட்டாலும் கூட அல்லாஹ் அவர்களை பின்பற்றத் தகுந்தவர்களாகவும், ஒளிமயமான நட்சத்திரங்கள் என்றும் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களின் உயர் அந்தஸ்த்து தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

எனது சஹாபாக்கள் தொடர்பாக இறையச்சத்தோடு செயல்படுங்கள். அவர்களை குறை கூறாதீர்கள். எவர்கள் அவர்களை நேசிக்கின்றார்களோ உண்மையில் அவர்கள் என்மீதுள்ள நேசத்தின் காரணமாக அவர்களை நேசிப்பார்கள். மேலும் எவர்கள் அவர்களோடு காழ்ப்புணர்ச்சி கொள்வார்களோ அவர்கள்

உண்மையில் என்மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொள்வார்கள். எவர்கள் அவர்களுக்கு துக்கத்தை அளித்தார்களோ அவர்கள் எனக்கு துக்கத்தை வழங்கினர். எவர்கள் எனக்கு துக்கத்தை வழங்கினார்களோ அவர்கள் அல்லாஹ்விற்கு துக்கத்தை வழங்கினர். மேலும் எவர்கள் அல்லாஹ்விற்கு துக்கத்தை வழங்கினார்களோ மேலும் அவனை கோபமூட்டினார்களோ பிறகு அவர்கள் அல்லாஹ்வின் பிடியில் உள்ளார்கள் என்பது வெளிப்படையாகும். (சுனன் திர்மிதி அப்வாபுல் மனாகிப் பாபு ∴பீமன் ஸப்ப அஸ்ஹாபுன்னபீ ஹதீஸ் 3882)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: என்னுடைய சஹாபாக்களை குறை கூறாதீர்கள்.

பல்வேறு முஸ்லிம் பிரிவுகள் ஒருவர் மற்றவரின் மீது குற்றம் சாட்டுகின்றனர். குறிப்பாக ஷியாக்கள் சஹாபாக்கள் தொடர்பாக அதிகமாக பேசுகின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்களின் அதாவது சஹாபாக்களின் எந்தவொரு செயலையும் தவறாக கூறாதீர்கள். எனது உயிர் எந்த இறைவனின் கையில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! நீங்கள் உஹது மலை அளவு தங்கத்தை சதகாவாக வழங்கினாலும் கூட அது சஹாபாக்கள் செலவழித்த ஒரு முத்துக்கு **(933.5** கிராமிற்கு) இணையாகவோ அல்லது அதன் பாதிக்கு இணையாகவோ ஆக முடியாது. (சஹீஹ் புகாரி கிதாபு ∴பஸாயிலு அஹ்ஹாபுன்னபீ லவ் குன்து முத்தஹீதன் கலீலா ஹதீஸ் 3673)

ஆக, இதுவே சஹாபாக்களின் தரமாகும். அவர்கள் மிகவும் உயர் அந்தஸ்தை உடையவர்களாக இருந்தனர். மேலும் நமக்கு முன்மாதிரிகள் ஆவர். இறை திருப்தியை பெற வேண்டுமென்றால் பிறகு அவர்கள் பின்னால் நாம் செல்ல வேண்டும். எந்தவொரு சஹாபா தொடர்பாகவும் எந்தவொரு தவறான விஷயத்தையும் பேசக் கூடாது. நாமே உருவாக்கியுள்ள ஓர் அளவுகோலை வைத்து சஹாபாக்களை தரம் பார்ப்பதென்பது தவறான நடைமுறையாகும்.

சஹாபாக்களின் உயர் அந்தஸ்து தொடர்பாக நமக்கு எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நீதியோடு பார்த்தால் நமது முழுமையான வழிகாட்டி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் தனது இறைவன் மற்றும் அவனது தூதருக்காக என்னென்ன தியாகங்களையெல்லாம் செய்துள்ளார்கள். அவர்கள் நாட்டை துறந்தனர். அநீதிகளை சகித்துக் கொண்டனர். பல்வேறு வகையான துன்பங்களை சகித்துக் கொண்டனர். உயிர் தியாகங்கள் செய்தனர். ஆனால் உண்மையோடும், விசுவாசத்தோடும் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். அவர்களை இந்த அளவுக்கு தியாகம் செய்ய வைத்தது எந்த விஷயம்? அது உண்மையான இறைவன் மீதுள்ள அன்பின் ஆர்வமாகும். அதன் ஒளி அவர்களது உள்ளங்களில் விழுந்தது. எனவே எந்த நபியோடு ஒப்பிட்டாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது போதனை மற்றும் ஆன்மாவை தூய்மைப்படுத்துதல், அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் உலகை வெறுத்தது, வீரத்தோடு உண்மைக்காக இரத்தம் சிந்தியது போன்ற முன்னுதாரணங்கள் வேறெங்கும் காணக் கிடைப்பதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் உயர் அந்தஸ்தாக இருந்தது. சஹாபாக்களிடையே இருந்த அன்பு பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இரு வரிகளில் கூறியுள்ளான்.

وَاَلَّفَ بَيْنَ قُلُوْبِهِمْ ۭ لَوْ اَنْفَقْتَ مَا فِي الْاَرْضِ جَمِيْعًا مَّآ اَلَّفْتَ بَيْنَ قُلُوْبِهِمْ

அதாவது, தங்க மலையை வழங்கினாலும் அவர்களின் உள்ளத்தை இவ்வாறு இணைத்திருக்க முடியாது. **(8:64)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஒரு ஜமாஅத் உள்ளது. அது தன்னகத்தில் சஹாபாக்களின் நிறத்தை மேற்கொள்ள வேண்டும். சஹாபாக்களின் ஜமாஅத் தூய்மையானதாக இருந்தது. திருக்குர்ஆன் அவர்களின் புகழால் நிரம்பி காணப்படுகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் அவ்வாறு இருக்கின்றீர்களா? மஸீஹோடு இருப்பவர்களும் சஹாபாக்களை ஒத்தவர்களாக இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறும் போது சஹாபாக்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்கள் தங்களது செல்வத்தையும், நாடு மற்றும் அனைத்தையும் விட்டு விட்டார்கள். மாபெரும் உண்மையாளரான ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பற்றி பெரும்பாலார் கேட்டிருப்பர். ஒரு முறை இறை வழியில் செலவு செய்ய கட்டளை வந்த போது வீட்டின் அனைத்து பொருட்களையும் கொண்டு வந்தார்கள். வீட்டில் எதை விட்டு வந்துள்ளீர்கள்? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டபோது, இறைவன் மற்றும் அவனது தூதரை வீட்டில் விட்டு வந்துள்ளேன் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் (அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்) மக்கத்து தலைவராக இருந்தும் கம்பிளியை போர்த்தக் கூடியவர்களாக இருந்தார்கள். அதாவது மக்காவின் தலைவராக இருந்தவர்கள் முஸ்லிமான பிறகு கம்பிளியையே போர்த்தக் கூடியவர்கள் ஆனார்கள். ஏழையின் ஆடையை அணிந்தார்கள். அவர்கள் இறை வழியில் உயிரை தியாகம் செய்தார்கள். வாளின் கீழ் சொர்க்கம் என்பது அவர்களுக்கு எழுதப்பட்டிருந்தது. ஆனால் நமக்கு அந்த அளவுக்கு கஷ்டம் இல்லை. ஏனென்றால் யழவுல் ஹர்ப் அதாவது போரை நீக்குவார் என்பது நமக்காக வந்துள்ளது. அதாவது மஹ்தியின் காலத்தில் போர் நடைபெறாது. (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 54-55; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு சஹாபாக்களின் வாழ்க்கை நடைமுறையை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்பதையும், பருகுவதையும் விரும்பக் கூடியவர்களாக இருந்தா நிராகரிப்பாளர்களை வெற்றி கொண்டனர். எளிதான நிலைமையை விரும்பக் கூடியவர்களாக இருந்தா அவர்கள் நிராகரிப்பாளர்களை வெற்றி பெற்றனர். ஒருபோதும் இல்லை. முந்தைய வேதங்களிலும் அவர்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அவர்கள் இரவில் நிற்கக் கூடியவர்களாகவும், பகலில் நோன்பு நோற்கக் கூடியவர்களாகவும் இருப்பர். அவர்களின் இரவுகள் இறை வணக்கத்திலும், அந்த கவலையிலும் கழிந்தன. அவர்களின் வாழ்க்கை எவ்வாறு கழிந்தது? திருக்குர்ஆன் கீழ்வரும் வசனம் அவர்களின் வாழ்வை படம் பிடித்துக் காட்டுகின்றது.

وَمِنْ رِّبَاطِ الْخَيْلِ تُرْهِبُوْنَ بِهٖ عَدُوَّ اللّٰهِ وَعَدُوَّكُمْ **(8:61)**

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اصْبِرُوْا وَصَابِرُوْا وَرَابِطُوْا **(3:201)**

அதாவது, இறைவனின் எதிரியும் உமது எதிரியும் உங்களது ஆயத்தம் மற்றும் ஆற்றலைக் கண்டு அஞ்சுவதற்காக எல்லைகளில் குதிரைகளைக் கட்டி வையுங்கள். நம்பிக்கையாளர்களே, பொறுமையை மேற்கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ரிபாத் என்றால் என்ன? எதிரிகளின் எல்லைகளில் கட்டப்படக் கூடிய குதிரைகள் ரிபாத் என்று அழைக்கப்படுகின்றன. அல்லாஹ் சஹாபாக்களை எதிரிகளுக்கு எதிராக எப்போதும் தயாராக இருக்குமாறு கட்டளையிடுகின்றான். இந்த ரிபாத் என்ற சொல்லின் மூலமாக முழுமையான மற்றும் உண்மையான ஆயத்த நிலையில் இருக்குமாறு நம்பிக்கையாளர்களுக்கு கவனமூட்டுகின்றான். அவர்களுக்கு இரு பணிகள் இருந்தன. ஒன்று, வெளிப்படையான எதிரிகளை சமாளிப்பது. இரண்டாவது, ஆன்மீக ரீதியில் போரிடுவது. ஆன்மீக ரீதியான போருக்கும் ரிபாத் என்ற கட்டளை உள்ளது. அதாவது எப்போதும் உண்மையான ஆயத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டளை உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அகராதியில் ரிபாத் என்ற சொல்லிற்கு ஆன்மா மற்றும் மனித உள்ளம் என்ற பொருளும் கொடுக்கப்படுகின்றது. பயிற்சி அளிக்கப்பட்ட மற்றும் கற்றுக் கொடுக்கப்பட்டவற்றையே குதிரைகள் செய்கின்ற என்பது ஒரு நுட்பமான விஷயமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்றைய நாட்களில் குதிரைகளின் பயிற்சி அவ்வாறே கருத்தில் கொள்ளப்படுகின்றது. பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்கு எவ்வாறு குறிப்பான கவனத்தோடு கற்றுக் கொடுக்கின்றார்களோ அவ்வாறு குதிரைகளுக்கும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. பயிற்சி அளிக்கப்படுகின்றது. அவற்றிற்கு பயிற்சி வழங்கவில்லையெனில் முற்றிலும் வீணாகி விடும். பயனளிப்பதற்கு பகரமாக ஆபத்தானதாக ஆகி விடும். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 54-55; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அதேபோன்று ஆன்மாவிற்கு பயிற்சி வழங்க வேண்டும். அதையும் கட்டுக் கோப்பில் வைப்பது அவசியமாகும். அதற்கும் கல்வி புகுட்டுவது அவசியமாகும். எனவே ஒரு நம்பிக்கையாளர் அறிவு ரீதியிலும் செயல் ரீதியிலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யும் போது தான் மேலும் ஆன்மாவையும் கட்டுக்கோப்பில் வைக்கும்போது அதுதான் ரிபாத் ஆக இருக்கும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைய தூய்மைப்படுத்தும் ஆற்றலால் சஹாபாக்கள் இடத்தில் வெளிப்பட்ட முன்மாதிரி எவ்வாறிருந்தது? அதனுடைய சில உதாரணங்களை நான் எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது ஒரு முன்மாதிரியை நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு மேற்கோளில் பார்த்தோம். அதாவது அன்னார் தனது வீட்டின் அனைத்து பொருட்களையும் மார்க்கத் தேவையின் போது எடுத்துக் கொண்டு வந்தார்கள். அன்னாரின் பணிவு மற்றும் இறையச்சம் தொடர்பான ஒரு சம்பவத்தை கேளுங்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோடு முரண்பாடு ஏற்பட்டது. நீண்ட விவாதம் நடந்தது. கோபத்தின் காரணத்தினால் குரல்களும் உயர்ந்தன. அதற்குப் பிறகு அதாவது பேச்சு முடிந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் சென்று மன்னிப்பு கேட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மன்னிக்க மறுத்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறி, நான் உங்களிடத்தில் மன்னிப்பு கேட்பதற்காக வந்துள்ளேன் என்று கூறினார்கள். அல்லாஹ் மன்னிப்பானாக என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் குற்ற உணர்வு ஏற்பட்டு வெட்கம் ஏற்பட்டதனால் மன்னிப்பு கேட்பதற்காக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களது வீட்டிற்குச் சென்றார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வீட்டில் இல்லை. பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முகம் உமர் (ரலி) அவர்கள் மீதிருந்த கோபத்தல் சிகப்பாக இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் முழங்கால்களில் அமர்ந்து, நான் தான் தவறு செய்தேன். நீங்கள் உமர் (ரலி) அவர்களை மன்னித்து விடுங்கள் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி கிதாபு ∴பஸாயிலு அஸ்ஹாபுன்னபி (ஸல்) பாபு கவ்லுன்னபீ லவ் குன்து முத்தஹிதன் கலீலா ஹதீஸ் 3661)

இதுதான் அன்னாரது பணிவு மற்றும் இறைவன் மீதிருந்த அச்சம் ஆகும். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் வெட்கமடைந்தார்கள். அவர்களும் கூட மன்னிப்பு கேட்பதற்காக தான் வந்திருந்தார்கள். இருவரிடமும் வெட்கம் ஏற்பட்டிருந்தது. இது தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய தூய சூழலாகும். மேலும் அதில் இருக்கக்கூடியவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்கு ஆளானார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிவு பற்றிய ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது. ஓர் மனிதர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நீங்கள் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை விடச் சிறந்தவர் ஆவீர்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். மேலும் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களது ஒரு இரவு மற்றும் ஒரு பகல் உமர் மற்றும் அவரின் சந்ததிகளின் முழு வாழ்நாளையும் விட சிறந்ததாகும். அந்த இரவு மற்றும் பகலைப் பற்றி நான் உமக்கு கூறட்டுமா? என்றார்கள்.

அந்த மனிதர் கூறுங்கள் என்ற போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவரின் இரவு எப்படி இருந்ததென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்து செல்ல வேண்டிய இரவாக அது இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அன்னாரோடு இருந்தார்கள். அவர்களுடைய ஒரு பகல் எவ்வாறிருந்தது என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத்தான போது அரபு மக்கள் தொழ மாட்டோம்; ஸக்காத் கொடுக்க மாட்டோம் என்று கூறிய போது எனது ஆலோசனைக்கு எதிராக ஜிஹாது செய்யப்படும் என்ற உறுதியான முடிவில் அவர்கள் இருந்தார்கள். மேலும் அல்லாஹ் அதில் அவர்களை வெற்றி பெறச் செய்து அவர்கள் உண்மையில் இருந்தார்கள் என்பதை நிரூபித்தான். (கன்ஸுல் உம்மால் கிதாபுல் ∴பஸாயில் பாபு ∴பஸாயிலுஸ் ஸஹாபா ∴பஸ்லுஸ் ஸித்தீக் தொகுதி 12 பக்கம் 493-494 ஹதீஸ் 35615)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் இன்னொரு மாபெரும் சஹாபி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள். அவர்கள் மூன்றாவது கலீஃபாவாகவும் இருந்தார்கள். அன்னார் கருணையோடு நடந்தது குறிப்பிடத்தக்கதாகும். அன்னாரிடத்தில் வேறு பல குறிப்பிடத்தக்க பண்புகளும் இருந்தன.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட அதிகமாக கருணையோடு நடப்பவர்களாகவும், அல்லாஹ்வுக்கு அஞ்சக் கூடியவராகவும் இருந்தார்கள். மார்க்கத்திற்காக அதிகமாக தியாகம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். (அல் இஸாபா ∴பீ தமீஸுஸ் ஸஹாபதி தொகுதி 4 பக்கம் 378. உஸ்மான் பின் க∴ப்பான் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2004 -ல் அச்சிடப்பட்டது)

மஸ்ஜிது நபவியின் விரிவாக்கம் நடைபெற்ற போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அக்கம் பக்கத்தில் இருக்கக்கூடிய வீடுகளையும் பள்ளியோடு இணைக்க வேண்டும் என்று கூறினார்கள். அதாவது அக்கம் பக்கத்தில் இருந்த வீடுகளை விலை கொடுத்து வாங்க வேண்டிய –திருந்தது. மார்க்கத்திற்காக தியாகம் செய்பவர்கள் அதிகம் இருந்தும் கூட ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முன் வந்து நான் அவைகள் அனைத்தையும் வாங்குகின்றேன் என்று கூறி 15000 திர்ஹம்கள் வழங்கி அந்த இடத்தை வாங்கினார்கள். முஸ்லிம்களுக்கு தண்ணீர் பிரச்சனை வந்த போது அதாவது ஒரு யூதரின் கிணற்றில் தண்ணீர் எடுப்பதில் சிரமம் ஏற்பட்ட போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த யூதர் சொன்ன விலைக்கு அந்த கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு தண்ணீருக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். (சுனன் நஸயீ கிதாபுல் அஹ்பாஸ் பாபு வக்∴புல் மஸாஜிது ஹதீல் 3637-3638) இது அன்னாருடைய மனித குலத்தின் மீதிருந்த அனுதாபமாகும்.

பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பாக பார்த்தால், அமீர் முஆவியா ஒருவரிடம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் நற்பண்புகளைப் பற்றி கூறுமாறு கேட்டபோது, நீங்கள் கேட்பீர்கள் என்றால் நான் கூறத் தயார் என்று கூறினார். அதற்கு அமீர் முஆவிய்யா, சரி கூறும் என்றார்கள்.

அந்த மனிதர் கூறினார்: கண்டிப்பாக கேட்டுத்தான் ஆக வேண்டுமென்றால் கேட்டுக் கொள்ளுங்கள். அவர் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தைரியமுடையவராகவும், வலுவான ஆற்றலுடையவர்களாகவும் இருந்தார்கள். சரியான விஷயத்தை கூறுவார்கள். நீதியோடு தீர்ப்பு வழங்குவார்கள். அவர்களிடமிருந்து அறிவின் நீரூற்று பீறிட்டு எழும். அவர்களின் எல்லா புறமிருந்தும் நுட்பமான ஞானம் வழிந்தோடும். உலகம் மற்றும் உலகப் பொலிவை வெறுத்தார்கள். இரவு மற்றும் அதன் தனிமையை நேசித்தார்கள். அதாவது இரவு நேரத்து இறை வணக்கம் அவர்களுக்கு மிகவும் விருப்பத்திற்கு உரியதாக இருந்தது. மேலும் கூறினார். அவர் அதாவது அலி (ரலி) அவர்கள் அதிகமாக அழக் கூடியவராக இருந்தார்கள். நீண்ட நேரம் சிந்திக்கக் கூடியவராக இருந்தார்கள். அவர்கள் எங்களில் எங்களைப் போன்றவராக இருந்தார்கள். அதாவது எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள்.

அவர் கூறுகின்றார்: இறைவன் மீது ஆணையாக! எங்களுக்கு அவர்களோடு அதிகமான நெருக்கமான தொடர்பு இருந்தும் அவரின் கம்பீரத்தின் காரணமாக நாங்கள் பேசுவதற்கு அஞ்சினோம். அதாவது அதிகமாக பேச முடியாது. அவர் மார்க்கமுடையவர்களுக்கு கண்ணியம் வழங்குவார்கள். மேலும் எளியவர்களுக்கு தன்னிடத்தில் இடமளிப்பார்கள். ஆற்றலுடையவர்கள் தங்களது பொய்யான கொள்கையினால் பேராசையோடு பலன் பெற விரும்பினால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். அங்கேயே பிடித்து விடுவார்கள். மேலும் பலகீனமானவர்கள் அன்னாரின் நீதியில் ஒருபோதும் அவநம்பிக்கை அடைவதில்லை. இதுவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சிறப்பம்சங்களாகும். அமீர் முஆவியாவும் கூட இதைக் கேட்டு விட்டு, ஆம். நீர் சரியாக கூறுகின்றீர் என்று கூறியவாறு அழத் தொடங்கினார்கள்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

(அல் இஸ்திஆப் ∴பீ ம∴ரிபதுல் அஸ்ஹாபி தொகுதி 3 பக்கம் 208-209 அலி இப்னு அபீதாலிப் பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 -ல் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்னொரு சஹாபி ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஆவார்கள். பொருள் தியாகம் செய்வதில் அவர்களுக்கென்று ஒரு தனி அந்தஸ்த்து உண்டு. பண வசதி படைத்த சஹாபியாக இருந்தார்கள். வியாபாரியாக இருந்தார்கள். அதிக செல்வம் இருந்தது.

ஒரு முறை ஒரு மனிதர் கஃபதுல்லாஹ்வை சுற்றி வந்து கொண்டிருந்த போது ஒரு குரலை கேட்டார். அந்த நபர் அல்லாஹ்வே, என்னை எனது ஆன்மாவின் கருமித்தனத்திலிருந்து பாதுகாப்பாயாக என்று துஆ செய்து கொண்டிருந்தார். இந்த துஆ செய்யக் கூடியவர் யார் என்று பார்த்த போது அது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபாக இருந்தார்கள். (அல் இஸ்திஆப் ∴பீ ம∴ரிபதுல் அஸ்ஹாபி தொகுதி 3 பக்கம் 388-389 அப்துர் ரஹ்மான் பின் அவ்∴ப் பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 -ல் வெளியிடப்பட்டது)

ஒரு முறை அன்னாரின் அதாவது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் வாணிப குழு மதீனா வந்த போது அதில் 700 ஒட்டகங்களில் கோதுமையும், மாவும், வேறு சில பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. மதீனாவில் இவ்வளவு பெரிய வாணிப குழுவைப் பற்றி பரபரப்பாக பேசப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த செய்தி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வரையும் சென்றடைந்திருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் சொர்க்கவாசி ஆவார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள். இது பற்றி ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்த போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடத்தில் வந்து உங்களை சாட்சியாக வைத்து பொருட்களை சுமந்து கொண்டிருக்கும் இந்த 700 ஒட்டகங்களோடு சேர்த்து இவற்றை இறைவழியில் தியாகம் செய்கின்றேன் என்றார்கள். (அஸதுல் காப் தொகுதி 3 பக்கம் 378 அப்துர் ரஹ்மான் பின் அவ்∴ப் பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 -ல் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் அந்தஸ்த்தை இவ்விஷயத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதாவது ஒரு முறை ஹஸ்ரத் காலிதோடு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்கு முரண்பாடு ஏற்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். காலிதே! என்னுடைய சஹாபாக்களை ஒன்றும் கூறாதீர்கள். உங்களில் எவரேனும் உஹது மலை அளவு தங்கத்தை செலவு செய்தாலும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஜிஹாது செய்து கழித்த காலையையோ அல்லது மாலையையோ கூட உங்களால் அடைய முடியாது. (கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 222-223 ஹதீஸ் 36674)

சஅத் பின் வகாஸ் என்ற ஒரு சஹாபி இருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடத்திலிருந்த ஈமான் பற்றிய சம்பவம் இவ்வாறு வருகின்றது. அவரே கூறுகின்றார்கள்:

நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது என்ன ஒரு புதிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டாயே? எனது எனது தாயார் கூறினார்கள். எந்நிலையிலும் இந்த மார்க்கத்தை நீ விட்டு விட வேண்டும் என்றும் அவ்வாறு விட்டு விடவில்லை என்றால் நான் உண்ணவும், குடிக்கவும் மாட்டேன் அதாவது மரணிக்கும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக கூறினார்கள். நான் மரணித்தால் இவர் தாயையே கொன்று விட்டார் என்று மக்கள் உன்னை சபிப்பார்கள் என்றார். கூறுகிறார்கள். அப்போது நான் எனது தாயிடம் கூறினேன். தாயே! அவ்வாறு ஒருபோதும் செய்யாதே. ஏனென்றால் நான் எனது மார்க்கத்தை ஒருபோதும் விட இயலாது. ஆனால் அவரின் தாய் ஏற்றுக் கொள்ளவில்லை. மூன்று இரவுகளும், பகல்களும் ஒன்றும் சாப்பிடாமலேயே கடந்து விட்டது. அப்போது நான் தாயிடம் சென்று, இறைவன் மீது ஆணையாக! உங்களுக்கு ஆயிரம் உயிர்கள் இருந்து அவை ஒவ்வொன்றாக பிரிந்து சென்றாலும் அப்போதும் கூட நான் எனது மார்க்கத்தை விட மாட்டேன் என்று கூறினேன். அந்த தாய் மகனின் இந்த உறுதிப்பாட்டை கண்டதும் உணவு உண்ண ஆரம்பித்து விட்டாள். அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 234 சஅத் பின் மாலிகுல் ∴பார்ஸி. பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2002 -ல் வெளியிடப்பட்டது)

பெற்றோர்களின் பேச்சை கேளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அவர்களுக்கு சேவை செய்யுங்கள் என்கின்றான். ஆனால் மார்க்கம் என்று வரும் போது அல்லாஹ் என்று வரும் போது அங்கு எந்நிலையிலும் நீங்கள் அல்லாஹ்வின் பேச்சை கேட்க வேண்டும். அன்னாருக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்று –வதற்காக மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது.


ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்த போது அந்நாட்களில் நிலைமை மோசமாக இருந்தது. அதன் காரணமாக அன்னார் இரவு வேளையில் நிம்மதியாக தூங்க முடியாத நிலை இருந்தது. இவ்வாறு பல இரவுகள் கழிந்தன. ஒரு நாள் இரவு பெருமானார் (ஸல்) அவர்கள் ஏதேனும் ஓர் இறை அடியார் பாதுகாப்பு கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அதாவது இந்த ஆபத்தான சூழ்நிலையில் நிம்மதியாக ஓய்வெடுக்கலாமே என்ற அடிப்படையில் கூறினார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிக்கொண்டிருந்த போது திடீரென ஆயுதங்களின் ஓசை கேட்டது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யார் என்று வினவிய போது நான் சஅத் என்று பதிலளித்தார்கள். எவ்வாறு வந்தீர்கள் என அன்னார் வினவிய போது உங்களுடைய பாதுகாப்பு பற்றிய அச்சம் எனக்கு ஏற்பட்டது. எனவே பாதுகாப்பு கொடுப்பதற்காக வந்துள்ளே என்று சஅத் பதிலளித்தார்கள். இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அன்றைய இரவு நிம்மதியாக உறங்கினார்கள். மேலும் சஅத் அவர்களுக்கு துஆ வழங்கினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபு∴பஸாயிலுஸ் ஸஹாபா பாபு∴பீ∴பஸ்லி சஅத் பின் அபீ வகாஸ் ஹதீஸ் 6231)

இன்னொரு சஹாபி சுபைர் பின் அல் அவாம் (ரலி) அவர்கள் ஆவார்கள். அவர்களிடத்தில் இறையச்சம் அதிகமாக இருந்தது. அதாவது அல்லாஹ்வின் பிடியில் வந்து விடும் அளவுக்கு ஏதேனும் தவறான விஷயங்கள் எதுவும் வாயிலிருந்து வந்து விடக்கூடாது என்ற அச்சம் அவர்களிடத்தில் மிகுதியாக இருந்தது.

ஒரு முறை அன்னாரின் மகன் அவர்களிடம் மற்ற சஹாபாக்களைப் போன்று நீங்கள் அதிகமாக ஹதீஸ்களை கூறுவதில்லையே என்று கேட்ட போது, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதில் இருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுப் பிரிந்ததில்லை. எப்போதும் அன்னாரோடே இருந்திருக்கின்றேன். ஆனால் அன்னாரின் ஒரு எச்சரிக்கைக்கு நான் மிகவும் அஞ்சுகின்றேன். அதாவத என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அறிவிப்புகள் உள்ளன. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த எச்சரிக்கை அதாவது எவர் ஒருவர் நான் கூறியதாக ஏதேனும் ஒரு தவறான விஷயத்தை கூறினால் அவர் நரகத்தில் தனது வீட்டை அமைத்துக் கொள்கிறார் என்ற எச்சரிக்கைக்கு அஞ்சுகின்றேன். அதாவது ஏதாவதொரு விஷயத்தை நான் புரியாமல் தவறாக கூறி விடுவேனோ என்ற காரணத்தினால் அச்சத்தினால் ஒன்றும் கூறுவதில்லை என்றார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் இல்ம் பாபுல் இஸ்மி மன் கஸிப அலன்னபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஹதீஸ் 107)

அன்னாரிடத்தில் வீரமும், ஆண்மையும் அதிகமாக இருந்தது. எந்த அளவுக்கு என்றால் சிக்கந்தரிய்யாவின் முற்றுகை நீண்ட போது அன்னார் ஏணியை வைத்து கோட்டையின் மீது ஏற நினைத்தார்கள். உடனிருந்தவர்கள் கோட்டையில் மோசமான கொள்ளை நோய் பரவிக் கொண்டிருக் –கின்றது என்று கூறிய போது அன்னார் அதை பொருட்படுத்தவில்லை. கோட்டை மதிலின் மீது ஏறினார்கள். செல்வமுடையவர்களாக இருந்தார்கள். செல்வம் வரும் போதெல்லாம் அதை இறை வழியில் சதகாவாக வழங்கி வந்தார்கள். (அத்தபகாத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 57-58)

பிறகு இன்னொரு சஹாபி அவர் பெயர் தல்ஹா பின் உபைதுல்லாஹ் ஆகும். இவரும்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

செல்வந்தராக இருந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்து வந்தார்கள். ஒரு முறை தனது சொத்துக்களில் ஒரு பகுதியை ஏழு லட்சம் திர்ஹத்திற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் விற்று அனைத்தையும் இறை வழியில் செலவு செய்தார்கள். விருந்து உபசரிப்பும் அன்னாரின் ஒரு சிறப்பான பண்பாக இருந்தது. ஒரு முறை ஒரு கோத்திரத்தின் கஷ்டப்பட்ட மூன்று நபர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் இவர்களை யார் பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள் என்று கேட்ட போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். மூவரையும் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். வீட்டில் தங்க வைத்து உபசரித்து வந்தார்கள். எதுவரை என்றால் அவர்கள் மூவரையும் வீட்டின் நிரந்தர அங்கமாக ஆக்கிக் கொண்டார்கள். எதுவரை என்றால் மரணம் தான் அவர்களை அன்னாரை விட்டு பிரித்தது. (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 446 ஹதீஸ் 1401. முஸ்னது தல்ஹா பின் உபைதுல்லாஹ். பைரூத்தில் உள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் தல்ஹா நட்பையும் சகோர உறவையும் மிகச் சிறப்பான முறையில் பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அன்ஸாரி அவர்கள் தபூக் போரில் கலந்து கொள்ளாத போது அவர்களோடு பேசக் கூடாது என்கின்ற தண்டனை அவருக்கு வழங்கப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் அவர்களை மன்னிப்பதற்கான அறிவிப்பை செய்த போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபைக்கு வந்த போது ஹஸ்ரத் தல்ஹா பைத்தியக்காரரைப் போன்று ஓடியவாறு அவரை வரவேற்பதற்காக சென்றார்கள். அவருக்கு கை குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்கள். ஹஸ்ரத் கஅப் எப்போதும் தல்ஹாவைப் போன்று யாரும் வரவேற்கவில்லை என்று கூறி வந்தார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி பாபு ஹதீஸ் கஅப் பின் மாலிக் (ரலி) ஹதீஸ் 4418)

பிறகு இன்னொரு நற்பண்பு இது மனைவிமார்களோடு தொடர்புடையதாகும். கணவர்களோடு தொடர்புடையதாகும். அன்னாரது ஒரு மனைவி கூறுகின்றார். ஹஸ்ரத் தல்ஹா சிரித்தவாறு வீட்டிற்குள் வருவார்கள். அவர்களுக்கு அதிகமான வேலைகள் இருந்தது. ஆனாலும் வீட்டிற்குள் வரும் போது வீட்டிலுள்ளவர்கள் அஞ்சி ஒதுங்கி விடும் அளவிற்கு அச்சமூட்டக்கூடிய முகத்தை உடையவர்களாக ஒருபோதும் வர மாட்டார்கள். மாறாக, மகிழ்ச்சியோடு சிரித்தவாறு உள்ளே நுழைவார்கள். மேலும் மகிழ்ச்சியோடு வீட்டை விட்டு செல்வார்கள். வீட்டிலுள்ளவர்களோடு எப்போதும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். வீட்டில் ஒரு முகம் வெளியில் ஒரு முகம் என்று அல்லாமல் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: எது கேட்டாலும் அவர்கள் கருமித்தனம் காட்டுவதில்லை. கேட்டால் வழங்கி விடுவார்கள். அமைதியாக இருந்தாலும் கூட கேட்க வேண்டும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க மாட்டார்கள். அதாவது கேட்டுத்தான் கிடைக்க வேண்டும் என்றல்ல. தேவைகளை அவர்களும் பார்த்து வந்தார்கள். மேலும் எப்படியாவது வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள். நான்கு மனைவிமார்கள் இருந்தனர். நால்வரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். மனைவி கூறுகின்றார். ஏதேனும் நன்மை செய்தால் நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். தவறு செய்தால் மன்னித்து விடுவார்கள். (கன்ஸுல் உம்மால் முஸ்னது தல்ஹா பின் உபைதுல்லாஹ் தொகுதி 12 பக்கம் 198-199 ஹதீஸ் 36592)

இந்த வழிமுறை தான் வீட்டின் நிம்மதிக்கு காரணமாக இருக்கின்றது. இவைகளே கணவன் மனைவி உறவுகளை வலுப்படுத்துகின்றது. எனவே இதுவும் கூட நமக்கு முன்மாதிரியாகும்.

இன்னொரு சஹாபி அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்கு கட்டுப்பட்ட சம்பவம் வருகின்றது. அன்னாரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூஃபா மக்களின் கல்விக்காவும், தர்பிய்யத்திற்காகவும் நியமித்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் இவரின் தேவை அதிகம் உள்ளது. இருப்பினும் கூட உங்களுக்காக தியாகம் செய்தவாறு உங்களுடைய தர்பிய்யத்திற்காக நான் இவரை அனுப்புகின்றேன் என்று கூஃபா மக்களுக்கு எழுதினார்கள். (அத்திப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 135-136) இது அவர்களின் உயர் தரமாகும்.


ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் கூட அன்னாருக்கு இதே அந்தஸ்த்தை வழங்கி வந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், கூஃபாவின் அமீராகவே ஆக்கினார்கள். அத்தோடு காஸியாகவும் ஆக்கினார்கள். பைத்துல் மால் அமைப்பும் இவர்களிடத்தில் இருந்தது. பிறகு சில பிரச்சனைகளின் காரணமாக கூஃபா வாசிகளின் சில விஷயத்தால் குழப்பங்கள் ஏற்பட்டன. அதன் காரணமாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவர்களை அமீர் பதவியிலிருந்து விலக்கி மதீனாவிற்கு திரும்ப அழைத்தார்கள். அப்போது நீங்கள் திரும்பிச் செல்லாதீர்கள். இங்கேயே இருங்கள். உங்களுக்கு எந்த இழப்பும் வராமல் பாதுகாப்பது எங்கள் பொறுப்பாகும் என்று கூஃபா மக்கள் அன்னாரிடம் கூறியபோது, காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவது என்மீது கடமையாகும். அவர்களுக்கு கட்டுப்படாமல் குழப்பத்தின் வாசலை திறப்பது என்பது என்னால் ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாது என்று அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் மதீனாவிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இவர்கள் தொடர்பாக ஒரு அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் பல சஹாபாக்களின் சபைகளில் அமர்ந்துள்ளேன். ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களின் உலகை விரும்பாமல் இருப்பது மற்றும் மறுமையை விரும்புதல் ஆகியவை ஒரு தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. (அல்இஸாபதி ஃபீ தமீஹுஸ் ஸஹாபதி தொகுதி 4 பக்கம் 201)


அன்னாரின் ஒரு பணியாள் கூறுகின்றார்: அன்னார் உலகத்தை நேசிக்காமல் இருந்தும் கூட அன்னார் சிறப்பான வெள்ளை ஆடையை அணிவார்கள். மேலும் உயர் தரமான நறுமணம் பூசுவார்கள். அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். இவர்களின் நறுமணம் எவ்வளவு உயர்தரமான –தாக இருந்தது என்றால் இரவின் இருளிலும் கூட நறுமணத்தை வைத்தே அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் வருகிறார் என்று கூறி விடலாம். (அத்திப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 83-84) ஆக, உலக பொருட்களை பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் உலகத்தின் மீது ஆசை இருக்கவில்லை.

பிறகு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எல்லா வகையான துயரங்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால் ஏக இறைவனின் முழக்கத்தை எப்போதும் செய்து வந்தார்கள். கடுமையான கல்லின் மீதும், சூடான மண்ணிலும் இழுக்கப்பட்டாலும் தனது ஈமானில் நிலைத்திருந் –தார்கள். அஹது அஹது என்றும் லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்றே கூறி வந்தார்கள். (அத்திப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 124)

பிறகு சஅத் பின் மஆஸ் என்றொரு சஹாபி இவர் அன்ஸாரி ஆவார். பத்ர் போரின் நாளில் அன்ஸார்களின் பிரதிநிதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்ஸார்களிடமிருந்த எதிர்பார்த்த பதிலை கூறியவாறு கூறினார். நபிகள் நாயகமே! நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். உங்களை உண்மைப்படுத்து –கின்றோம். சான்று பகர்கின்றோம். அதாவது நீங்கள் கொண்டு வந்த போதனை உண்மையான –தாகும். எப்போதும் உங்களது பேச்சைக் கேட்டு உடனடியாக அதற்கு கட்டுப்படுவோம் என்று உங்களிடத்தில் நாங்கள் உறுதியான உடன்படிக்கை செய்துள்ளோம். எனவே அல்லாஹ்வின் தூதர் அவர்களே, உங்களது

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

எண்ணப்படி முன்னேறுங்கள். இன்ஷா அல்லாஹ் எங்களை உங்கள் பின்னால் காண்பீர்கள். நீங்கள் எங்களை கடலில் குதிக்குமாறு கட்டளை இட்டாலும் நாங்கள் அதில் குதித்து விடுவோம். எங்களில் ஒருவர் கூட பின்தங்கி விட மாட்டோம். மேலும் நாங்கள் எதிரிகளை எதிர்கொள்வதற்கு அஞ்சவில்லை. மேலும் நாங்கள் வலுவாக எதிர்ப்பதை நன்கு அறிவோம். உங்களுடைய கண்கள் குளிரும் செயல்களை அல்லாஹ் எங்களிடம் இருந்து வெளிப்படுத்துவான் என்று நாங்கள் முழுமையாக நம்புகிறோம். எனவே நீங்கள் எங்கு விரும்பினாலும் எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்றனர். (சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 421 பாபு கஸ்வா பத்ருல் குப்ரா மீஸாக் ஃபிர்ரஸூ லுல்லாஹ்)

ஆக, இம்மக்கள் தான் தங்களுடைய உடன்படிக்கைகளை பூர்த்தி செய்தனர். மேலும் தங்களது முன்மாதிரிகளை நிலைநாட்டினர். அல்லாஹ் இவர்களோடு திருப்தி அடைந்தான். இது ஒரு சில சஹாபாக்களின் முன்மாதிரியாகும். வரலாறு இது போன்ற முன்மாதிரிகளால் நிரம்பி காணப்படுகிறது. இவர்கள் நாம் பின்பற்றத் தகுந்தவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை விட்டு விட்டு வெற்றி பெறுவது என்பது சாத்தியமற்றதாகும். இவர்கள் தேடிக் கொண்டிருக்கின்ற அப்படிப்பட்ட வெற்றி என்பது கற்பனையான ஒன்றாகும். சஹாபாக்களின் முன்மாதிரியை உங்கள் முன் வையுங்கள். பாருங்கள். அவர்கள் இறை தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றிய போது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியபோது அல்லாஹ் அவர்களோடு செய்திருந்த அனைத்து வாக்குறுதிகளும் பூர்த்தியாகின. ஆரம்பத்தில் எதிரிகள் எள்ளி நகையாடி வந்தனர். சுதந்திரமாக வெளியில் செல்ல முடியாத நிலை இருந்தது. ஆனால் அரசர்களாவோம் என்று வாதம் செய்தனர். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் தம்மை மாய்ந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அவர்களுக்கு கிடைத்திராத அருட்களை பெற்றனர். அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு அன்பு செலுத்தினர். மேலும் அவர்களுக்கு கட்டுப்படுவதில் இரவும் பகலும் முயற்சி செய்து வந்தனர். நம்பிக்கை கொண்ட பிறகு நிராகரிப்பாளர்கள் செய்து வந்த அனைத்து வேலைகளையும் விட்டு விட்டனர். முழுக்க முழுக்க இஸ்லாமிய போதனைகளின் படி அமல் செய்ய ஆரம்பித்தனர். இஸ்லாம் இவ்வாறு இருந்த காலம் வரை முன்னேற்றமானதாகவும் புகழ்பெற்ற காலமாகவும் அது இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் இஸ்லாம் முன்னேறி வந்தது. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 157; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு பிரிதோரிடத்தில் சஹாபாக்களின் சிறப்புகளை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு விசுவாசமானவர்களாகவும் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தார்கள் என்றால் எந்த நபிமார்களின் சீடர்களிடத்திலும் இது போன்ற முன்மாதிரிகள் காணக் கிடைப்பதில்லை. அவர்கள் இறை கட்டளையில் எவ்வாறு நிலைத்திருந்தார்கள் என்றால் திருக்குர்ஆன் முழுவதும் அவர்களின் புகழ்ச்சியால் நிரம்பி கிடக்கின்றது. மது தடுக்கப்பட்டபோது பாத்திரங்களிலிருந்த அனைத்து மதுவும் எறியப்பட்டது. எந்த அளவுக்கு மது ஓடியது என்றால் ஓடைகளாக உருவெடுத்தது. பிறகு ஒருபோதும் அவர்களிடத்தில் அந்த செயல் வெளிப்படவில்லை. அதாவது ஒரு முறை மதுவிலிருந்து விலகி பாவமன்னிப்பு கோரிய போது பிறகு மீண்டும் அதை ஒருபோதும் அருந்தியதில்லை. அவர்கள் மதுவின் எதிரியாக ஆகி விட்டார்கள். இது எப்படிப்பட்ட நிலைத்திருத்தல் என்று பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு விசுவாசத்தோடும் அன்போடும் மேலும் கொள்கை பிடிப்போடும் சஹாபாக்கள் கட்டுப்பட்டார்கள் என்றால் அதைப் போன்று வேறு எவரும் செய்யவில்லை.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஜமாஅத்தின் நிலையை படிக்கும் போது தெரிய வருவது என்னவென்றால் அது பல முறை அன்னாரின் மீது கல்லெறிய நினைத்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் எவ்வளவு பலவீனமானவர்களாகவும், கொள்கை பிடிப்பில் பலகீனமானவர்களாகவும் இருந்தார்கள் என்றால் கிறித்தவர்களே அதை ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களே பைபிளில் இது தொடர்பாக, சோம்பேறியான கொள்கை என்று கூறியுள்ளார்கள். அவர்கள் தனது ஆசிரியரோடு துரோகம் இழைத்தார்கள். அவிசுவாசம் காட்டினர். அந்த கஷ்டமான வேளையில் விட்டு சென்று விட்டனர். ஒருவர் பிடித்துக் கொடுத்தார். மற்றொருவர் சபித்து மறுத்து விட்டார்.

ஆனால், சஹாபாக்கள் எவ்வளவு உறுதியானவர்களாகவும் உயிரை தியாகம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள் என்றால் இறைவனே அவர்கள் தொடர்பாக அவர்கள் உயிரை தியாகம் செய்யக்கூட தயங்கியதில்லை என்று சான்று பகர்ந்துள்ளான். ஈமானின் எல்லா பண்புகளும் அவர்களிடத்தில் காணக் கிடைக்கின்றன. இறைவணக்கம், தூய்மையம்சம், கொடையம்சம், வீரன் மேலும் விசுவாசம் போன்ற ஈமானின் நிபந்தனைகள் வேறெந்த சமுதாயத்திலும் காணக் கிடைப்பதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் ஆரம்பத்தில் சஹாபாக்களுக்கு எந்த அளவுக்கு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியது வந்தது என்றால் அதுபோன்ற முன்னுதாரனும் வேறு எந்த சமுதாயத்திலும் காணக் கிடைப்பதில்லை. இந்த வீரமுடைய சமுதாயம் அந்த கஷ்டங்களை எல்லாம் பொருத்துக் கொண்டது. ஆனால் இஸ்லாத்தை விடவில்லை. இந்த கஷ்டங்களின் உச்சகட்டமாக அவர்கள் தங்கள் நாடுகளை விட்டு வெளியேற வந்தது. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது. இறைவனின் பார்வையில் நிராகரிப்பாளர்களின் விஷமம் வரம்பு மீறியபோது அவர்கள் தண்டனைக்கு தகுந்தவர்களாக ஆகிய போது அந்த தீய சமுதாயத்திற்கு தண்டனை வழங்க அந்த சஹாபாக்களையே இறைவன் நியமித்தான். அவர்கள் பள்ளிவாயிலில் இரவு பகலாக தமது இறைவனை வணங்கி வந்தார்கள். அவர்கள் மிகக் குறைவானவர்களாகவே இருந்து வந்தனர். அவர்களிடம் போருக்கான எந்தவொரு ஆயுதங்களும் இருக்கவில்லை. எதிரிகளின் தாக்குதலை தடுப்பதற்காக போர்க்களத்திற்கு வர நேரிட்டது. இஸ்லாமிய போர்கள் தற்காப்புப் போர்களாக இருந்தன. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 137-138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)


பிறகு இன்னொரு இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் சஹாபாக்கள் ரில்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் அவர்களின் காலத்தை பார்ப்போமென்றால் அவர்கள் நேர்மையானவர்களாக இருந்ததை காண முடியும். ஒரு பாத்திரம் ஈயம் பூசப்பட்டு பிரகாசமாக ஆக்கப்படுவதைப் போன்று அவர்கள் இருந்தார்கள். அதேபோன்று தான் அவர்களது உள்ளங்கள் இறை வார்த்தைகளின் ஒளியினால் ஒளிமயமானதாக இருந்தது. قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰىهَا அதாவது எவர் தனது ஆன்மாவை தூய்மைப்படுத்தினாரோ அவர் வெற்றி பெற்று விட்டார் என்பதன் முன்மாதிரியாக இருந்தார்கள். **(91:10)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் இதுபோன்று தூய்மையானவனாக இருந்தால் மேலும் தன்னை ஈயம் பூசப்பட்ட பாத்திரத்தைப் போன்று பிரகாசமாக வைத்திருந்தால் இறைவனின் அருட்கள் எனும் உணவு அதில் போடப்படும். ஆனால் எவ்வளவு மனிதர்கள் இவ்வாறு இருக்கின்றனர்? قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰىهَا எவர் தனது ஆன்மாவை தூய்மைப்படுத்தினாரோ அவர் வெற்றி பெற்று விட்டார் என்பதற்கு பொருந்தக் கூடியவர்களாக யார் இருக்கின்றார்கள்? (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 15; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆக, நாம் நம்மை சீர்திருத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது பாத்திரத்தை தூய்மைப்படுத்த வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் பிறகு அன்னார் கூறிய அனைத்து விஷயங்களின்படி நடக்கவும் முயற்சி செய்ய வேண்டும். அதன் முன்மாதிரிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாரது சஹாபாக்களும் நிலைநாட்டியுள்ளனர். அந்த முன்மாதிரிகளை பின்பற்றும் போது தான் நாம் உண்மையாக முஸ்லிம்களாக ஆக முடியும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**Classic Mobile's & Watch,**
**Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
email: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில கண்ணியத்திற்குரிய சஹாபாக்கள் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) தமது வாழ்வில் காட்டிய கலப்பற்ற தன்மை, அவர்களது அர்ப்பணிக்கும் மனப்பாங்கு, இறை வணக்கங்களில் அவர்களுக்கு இருந்த ஈடுபாடு, இறை வழியில் அவர்கள் செய்த தியாகங்கள், அவர்களது அழகிய நல்லொழுக்கங்கள் ஆகியவை தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சஹாபாக்களின் தூய முன்மாதிரிகளைப் பின்பற்றி நடக்குமாறு ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹுஸூர் அவர்கள் முக்கிய அறிவுரைகளைக் கூறியுள்ளார்கள்.**

---

**ஹாலந்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஃபஹீம் டீஃபன் தாலர் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அரீஷா டீஃபன் தாலர் சாஹிபா அவர்கள் பெனின் நாட்டில் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமா அவர்கள் அங்கு அனாதைகளை ஆதரித்து அவர்களை கவனித்து உதவி செய்து வருவதற்காக நியமிக்கபட்டிருக்கின்ற தாருல் இக்ராமின் பொறுப்பாளராக இருந்தார்கள். மர்ஹூமாவின் கலப்பற்ற தன்மை, நன்றியுணர்வு, புகழ்வதற்கேற்ற நண்பண்புகள் ஆகியவற்றை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைத்தார்கள்..**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**22 டிசம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **22 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

கடந்த குத்பாவில் நான் சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களுடைய கண்ணியம், மேன்மை மற்றும் அவர்களின் முன்னுதாரனங்களின் அடிப்படையில் சில விஷயங்களை கூறி இருந்தேன். சில சஹாபாக்களின் வாழ்க்கை சம்பவங்களையும் கூறியிருந்தேன். இன்னும் சிலவற்றை கூற விரும்பியிருந்தேன். ஆனால் நேரக் குறைவின் காரணமாக எடுத்துரைக்க முடியாமல் போனது. பின்னர் மக்களிடமிருந்து வந்த கடிதங்களின் மூலமாக நான் எடுத்து வைத்திருந்த குறிப்புகளை குறைந்தபட்சம் கூறி விட வேண்டும் என நான் உணர்ந்தேன். அதன் மூலம் சஹாபாக்களைப் பற்றியும் அவர்களின் தியாகங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதுடன் அவர்களின் முன்னுதார –ணங்களை செயல்படுத்துவதின் பக்கம் நமக்கு கவனமும் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன்.

எனவே இன்று நான் அந்த அடிப்படையிலேயே விஷயங்களைக் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க ஒரு சஹாபி ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஆவார்கள். ஒரு சஹாபி என்ற அடிப்படையில் நிச்சயமாக அவர்களுக்கு ஒரு அந்தஸ்த்து இருந்தது. பல்வேறு சிறப்புகளை அன்னார் பெற்றிருந்தார்கள். ஆனால் அன்னாரின் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்ற பண்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கிய நற்சான்றிதழைப் பற்றி அறிவிப்பில் வருகின்றது.

நஜ்ரான் பகுதியை சார்ந்தவரிடம் வரி வசூல் செய்வதற்காக ஒருவரை அனுப்பும்படி கூறிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் நிச்சயமாக உங்களிடம் ஒரு முழுமையான நம்பிக்கைக்குரியவரை அனுப்புவேன். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் தலையை உயர்த்தி இங்கும் அங்கும் பார்க்கத் துவங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய அந்த சிறப்பிற்குரிய மனிதர் யார் என அவர்கள் காண விரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ உபைதா அவர்களே! எழுந்திருங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை அங்கு அனுப்பி வைக்க கட்டளையிட்டார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் மகாஸி பாபு இஸ்ஸத்தி அஹ்லே நஜ்ரான் ஹதீஸ் 4380)

அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு வழிகாட்டுதலைப் பற்றி ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிப்பு கிடைக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வோர் உம்மத்திலும் நிச்சயமாக ஒரு அமீன் அதாவது நம்பிக்கைக்குரியவர் ஒருவர் இருப்பார். எனது சமுதாயமே! நமது அமீன் அதாவது நம்பிக்கைக்குரியவர் ஹஸ்ரத் அபூ உபைதா பின்ஜராஹ் அவர்கள் ஆவார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் மனாகிபு பாபு மனாகிபு அபூ உபைததுல் பின்ஜராஹ் (ரலி) ஹதீஸ் 3744)

எத்தகைய பெரிய சிறப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு வழங்கியுள்ளார்கள்.

அடுத்து உஹது போரில் அன்னாரைப் பற்றி ஒரு சம்பவம் தெரிய வருகின்றது. அந்த சம்பவம் அன்னாருக்கு மகத்துமிக்க ஒரு அந்தஸ்த்தை வழங்கியுள்ளது. உஹது போரில் இஸ்லாத்தின் எதிரிகள் தரப்பிலிருந்து மிக கடுமையாக கற்கள் வீசப்பட்டன. முதலில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் ஒரு இடத்தை விட்டு விட்டதன் விளைவாக காஃபிர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தினார்கள். அப்போது மிக அதிகமான கற்களை வீசினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கியும் கற்களை வீசினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகக் கடுமையான கற்கள் வந்து தாக்கின. அதாவது அன்னார் முகத்தில் அணிந்திருந்த இரும்புக் கவசங்களின் சிறுதுண்டுகள் உடைந்து அன்னாரின் கண்ணங்களை குத்தியது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணங்களிலிருந்து அந்த இரும்பின் சிறு துண்டுகளை வெளியேற்றினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: முதலில் ஒரு இரும்பு சிறுதுண்டுகளை தனது பற்களால் கடித்தார்கள். மிக வேகமாக அதனை இழுத்தார்கள். உள்ளே அது புகுந்திருந்தது. அது வெளியே வந்தது. எந்த அளவிற்கு அழுத்தம் கொடுக்க நேரிட்டது என்றால் அது வெளியேறிய உடன் கொடுக்கப்பட்ட அழுத்தத்தால் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். அத்துடன் அன்னாருடைய முன் பல் ஒன்றும் உடைந்து போனது. மீண்டும் இரண்டாவது துண்டையும் இதே போன்று தனது பற்களால் கடித்து இழுத்தார்கள். அப்போது அன்னாருடைய இரண்டாவது பல்லும் உடைந்து போனது. பின்னர் அதே போன்று அன்னார் கீழே விழுந்தார்கள். மிக ஆழமாக அந்த இரும்பு துண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கண்ணங்களில் குத்தி இருந்தது.

ஆக, இதுதான் பேரன்பு மற்றும் அர்ப்பணிப்பின் சம்பவங்களாகும். இது உலகம் இருக்கும் வரை ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் நினைவை நிலைநாட்டும்.

அன்றைய காலத்தில் மக்கள் கூறி வந்தார்கள். அறிவிப்பில் வருகின்றது. அதாவது முன்னால் உள்ள இரு பற்கள் உடையப்பட்ட மனிதர்களில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களைப் போன்ற அழகிய மனிதர் வேறு எவரையும் நாங்கள் கண்டதில்லை. (அத்தபுகாதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 218. வ மின் பனீ ∴பஹர் பின் மாலிக்.... அபூ உபைதது பின் ஜர்ராஹ் (ரலி). பைரூத்திலுள்ள தாருல் அஹ்யாயுதுர் ரஸூல் அரபியில் 1998 -ல் அச்சிடப்பட்டது) பொதுவாக பற்கள் உடைந்து போவதால் முகத் தோற்றத்தில் சற்று வித்தியாசம் ஏற்பட்டு விடுவதுண்டு. ஆனால் அவர்களின் பற்கள் உடைந்த பின்னரும் கூட அன்னாரது அழகு அதிகமே ஆகியது.

அன்னாரின் பணிவு மற்றும் ஒத்துழைப்பு மற்றும் நுட்பமான ஞானத்துடன் பிரச்சனைகளை தீர்ப்பது தொடர்பான ஒரு சம்பவம் இவ்வாறு வருகின்றது.

ஒரு போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர் பின் ஆஸ் அவர்களை படைத் தலைவராக ஆக்கி அனுப்பினார்கள். அங்கு சென்ற பிறகு எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தெரிய வந்தது. அன்னாரின் படையில் பெரும்பாலும் புதியவர்களே இருந்தார்கள். பெரிய சஹாபாக்கள் குறைவானவர்களே இருந்தார்கள். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் மேலும் உதவி வேண்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் தலைமையில் ஒரு படைப்பிரிவை அனுப்பி வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அறிவுரையை செய்தார்கள்.

இரண்டு அமீர்மார்களும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் பணி செய்ய வேண்டும். ஆனால் அமர் பின் ஆஸ் அவர்கள் படையோ எனது உதவிக்காகவே வந்துள்ளது என்று நினைத்து புதிதாக வந்து சேர்ந்த படையை தமக்கு கீழ் செயலாற்றக் கூடியதாக எண்ணினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் சிப்பாய் –களுக்கு நேரடியாக கட்டளையிடத் தொடங்கி –னார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் தலைமையின் கீழ் பெரிய சஹாபாக்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமீராக ஆக்கி சுதந்திரமான முறையில் படையின் தலைவராக நியமித்துள்ளார்கள். மேலும் ஒருவர் மற்றவருடன் ஒத்துழைப்பு நல்கியவாறு செயல்பட வேண்டும் என கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் தமது படையின் தலைவர் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் தமது படையின் தலைவராக இருந்தார்கள்.

ஆயினும், இருவரும் தங்களுக்கிடையில் ஒத்துழைப்புடன் பணி செய்யும்படி அறிவுரை வழங்கி இருந்தார்கள். ஆனால் அம்ர் பின் ஆஸ் அவர்களோ, நானோ படையின் அமீர் ஆவேன். எனது வேண்டுகோளிற்கேற்பவே புதிதாக படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் எந்த தர்க்கத்திலும் ஈடுபடாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை ஒரு சுதந்திரமான அமீராக அனுப்பி இருந்த போதிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் என்று கூறியிருந்தார்கள். எனவே, நான் எப்போதும் உங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவேன். நீங்கள் எனது கூற்றை ஏற்றுக் கொண்டாலும் சரி; இல்லையென்றாலும் சரியே. எல்லா விஷயங்களிலும் நான் உங்கள் கூற்றை ஏற்பேன் என்று கூறினார்கள். (அல் இஸாபது ∴பீ தமீஸுஸ் ஸஹாபா தொகுதி 3 பக்கம் 477. ஆமிர் பின் அப்துல்லாஹ் பின் ஜர்ராஹ். பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2005 -ல் அச்சிடப்பட்டது)

ஆக, இதுதான் சூழ்நிலை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சரியான முடிவெடுத்து முஸ்லிம்களின் வலிமையை உறுதிப்படுத்துவதற்காக தனது அதிகாரத்தையும் விட்டு விடுவதாகும். ஒருவருக்கொருவர் இடையிலான இந்த ஒத்துழைப்பு தான் இன்று முஸ்லிம்களின் வலிமையை வல்லமைமிக்கதாக ஆக்க முடியும். இதுவே இன்றைய முஸ்லிம்களின் தேவையாகும். எவ்வாறு தங்களுக்கிடையில் ஒத்துழைப்புடன் பணியாற்ற வேண்டும் என்ற அறிவு இந்த முஸ்லிம் தலைவர்களுக்கு ஏற்பட்டு விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அரசாங்கத்தை நீதியுடன் நடத்துவதற்கும் எதிரிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் படிப்பினை கிடைக்கின்றது.

ரோமானிய அரசர் ஒரு மாபெரும் படையை முஸ்லிம்களுக்கெதிராக அனுப்பி வைத்தார். அப்போது முஸ்லிம்களின் படையின் தலைவராக ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் இருந்தார்கள். முதலில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்திருந்தது. அவர்கள் இடங்களை கைப்பற்றி இருந்தார்கள். ஆனால் பின்னர் பெரும் படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. கிறித்தவர்களின் பெரும்பாலான நகரங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஆலோசனைக்குப் பிறகு ஒரு நுட்பமான செயல் திட்டத்தை அமல்படுத்தினார்கள். அதாவது தற்போது சில நகரங்களை விட்டு நாம் வெளியேறி விட வேண்டும். முஸ்லிம்கள் வெற்றி கொண்டிருந்த பகுதியை விட்டு விட வேண்டும் என அன்னார் முடிவெடுத்தார்கள். வெற்றிக்குப் பிறகு முஸ்லிம் அல்லாத அங்குள்ள குடிமக்களிடம் இருந்து வரி வசூல் செய்திருந்தார்கள். தற்போது எங்களால் உங்களை பாதுகாக்க முடியாது. உங்களுக்குரிய உரிமைகளை எங்களால் வழங்க முடியாது. எனவே ஜஸ்யாவாக நாங்கள் உங்களிடமிருந்து வசூல் செய்த வரிப் பணத்தை உங்களிடம் திரும்ப ஒப்படைக்கின்றோம் என்று கூறினார்கள். அந்த அடிப்படையில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதியின் குடிமக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட லட்சக்கணக்கான தொகை திருப்பி அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்த நீதி மற்றும் அமானிதத்தை திருப்பி ஒப்படைத்தலின் சம்பவம் முஸ்லிம் அல்லாதவர்களிடம் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் உள்ளூர் கிறித்தவ குடிமக்கள் முஸ்லிம்களை வழியனுப்பி வைக்கும் போது அழுது கொண்டிருந்தார்கள். இறைவன் உங்களை மீண்டும் அழைத்து வருவானாக என்று உள்ளத்தால் துஆ செய்து கொண்டிருந்தார்கள். (மேரா சஹாபா தொகுதி 2 பக்கம் 129. சீரத் அபூ உபைததுல் பின் ஜர்ராஹ். தாருல் இஷாஅத் கராச்சியில் 2004 -ல் அச்சிடப்பட்டது. ∴புதூஹுல் பல்தான் (பலாஸுரி) பக்கம் 83-87. பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2000 -ல் அச்சிடப்பட்டது)

இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நட்பில் இருந்து நீதி மற்றும் நேர்மையின் எப்படிப்பட்ட உயர் தரத்தை நிலைநாட்டியுள்ளார்கள் என்றால் அதனை இதற்கு முன்பும் எவரும் கற்பனை செய்திருக்க முடியாது. இனியும் செய்ய முடியாது. இன்று உலக அமைதிக்கான உத்திரவாதம் என்பது இவ்வாறு நீதி மற்றும் நேர்மையின் அடிப்படையில் செயல்பட்டு அமானிதத்திற்குரிய உரிமையை வழங்குவதன் மூலமாகவே கிடைக்க முடியும். எங்களில் விருப்பத்திற்கேற்ப நீங்கள் செயல்பட வேண்டும். இல்லையென்றால் நங்கள் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என வல்லரசுகள் சிறிய நாடுகளை மிரட்டுவதால் உலக அமைதிக்கான உத்திரவாதம் கிடைக்க முடியாது. இதுவே இன்றைய பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் நடக்கின்றது. பொது மக்களிடமிருந்து வரி வசூல் செய்து விட்டு அதனை அவர்களுக்கு செலவிடுவதற்கு பகரமாக தமது கருவூலத்தையே பெரும்பாலானவர்கள் நிரப்பிக் கொள்கின்றார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் சஹாபாக்கள் மீதும் அன்பு கொண்டிருப்பதாக முழக்கங்கள் மட்டும் இடுகின்றார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தை ஆவார்கள். அன்னார் வள்ளல் தன்மையிலும், உறவினர்களுடன் நல்ல முறையில் நடப்பதிலும் மிகப் பிரபலமானவர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். குறைஷிகளில் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் எல்லோரையும் விட வள்ளல் தன்மை கொண்டவர்கள் ஆவார்கள். மற்றும் உறவினர் –களுடன் நல்ல முறையில் நடப்பவர் ஆவார்கள். இதனை செவியுற்ற ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் தனது **70** அடிமைகளை விடுதலை செய்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 62. அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப். பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 -ல் அச்சிடப்பட்டது) இதுவே இம்மக்களின் வள்ளல் தன்மைக்கான உயர் தரமாகும்.

ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாரின் மகன் வழி சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உடன் பிறந்த சகோதர் ஆவார்கள். அன்னாரும் ஆரம்ப காலக்கட்டத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான பாக்கியத்தை பெற்றார்கள். மேலும் மக்காவின் நிலைமையின் காரணமாக ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். மக்காவாசிகளுக்கு இது பற்றி தெரிய வந்த போது அவர்கள் தமது இரு தலைவர்களுக்கு பல்வேறு அன்பளிப்புகளைக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள். ஹப்ஷாவின் தலைவர்களுக்கு பரிசுப் பொருட்களையும் அனுப்பிக் கொடுத்தார்கள். எங்களது சில புரியும் தன்மையற்ற இளைஞர்கள் தமது மார்க்கத்தை விட்டு விட்டு இங்கு வந்து விட்டார்கள். அதாவது உங்கள் நாட்டிற்கு வந்துள்ளார்கள். உங்களது மார்க்கத்தையும் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் முற்றிலும் புது மார்க்கமாகும் என்ற செய்தியை தமது தலைவர்களின் மூலம் அனுப்பி வைத்தார்கள். மேலும் ஏராளமான பரிசுப் பொருட்களுடன் அபிசீனியா சென்றார்கள். அங்கு சென்று அங்குள்ள தலைவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்த அரசரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்கள். அரசரை சந்தித்தார்கள். அரசருக்கும் பரிசுகளை வழங்கினார்கள். அவர்களின் விஷயங்களைக் கேட்ட பிறகு அபிஸீனியாவின் மன்னர் முஸ்லிம்களை தமது அரசவைக்கு வரவழைத்தார். முஸ்லிம்கள் நம்முடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படுமோ என்ற அச்சத்துடன் அங்கு சென்றார்கள். நீங்கள் உங்களின் மார்க்கத்தை கைவிட்டதற்கான காரணம் என்ன? என்று நஜ்ஜாஸி கேட்டார். முந்தைய எந்த மார்க்கத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எங்களது மார்க்கத்தையும் அதாவது கிறித்தவத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது ஏன்? என்று கேட்டார்.

ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் பிரதிநிதியாக செயல்பட்டார்கள். அவர்கள் கூறினார்கள். அரசரே! நாங்கள் அறிவீனமான சமுதாயத்தை சார்ந்தவர்களாக இருந்தோம். சிலைகளை வணங்கி வந்தோம். இறந்தவற்றை உண்டு வந்தோம். தீய நடத்தையும், உறவினர் –களுடன் தவறாக நடந்து கொள்வதும் எங்களின் வாடிக்கையாக இருந்தது. எங்களில் வலிமை மிக்கவர் பலவீனமானவரை நசுக்கி வந்தனர். இந்த நிலைமைகளில் அல்லாஹ் எங்களில் ஒரு

தூதரை அனுப்பினான். அவரின் கண்ணியத்தையும் உண்மையையும், அமானிதத்தை பேணுதலையும், தூய்மையையும், குடும்ப மேன்மையையும் நாங்கள் நன்றாக அறிந்திருந்தோம்.

அவர் எங்களை இறைவனின் ஓரிறைமையின் பக்கமும், அவனை வணங்குவதன் பக்கமும் எங்களை அழைத்தார். மேலும் இறைவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது என்றும், சிலைகளை வணங்கக்கூடாது என்றும் எங்களுக்கு போதித்தார். உண்மை, உறவுகளை பேணுதல், அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடத்தல் போன்றவற்றை போதித்தார். வீண் சண்டை சச்சரவுகளிலிருந்தும் இரத்தம் சிந்துவதிலிருந்தும் எங்களை தடுத்தார். வெட்கக்கேடான விஷயங்களிலிருந்து விலகி இருக்கும்படி போதித்தார். பொய் பேசுவதிலிருந்தும், அனாதைகளின் செல்வங்களை விழுங்குவதிலிருந்தும், தூயவர்களின் மீது பழி சுமத்துவதிலிருந்தும் எங்களை தடுத்தார். மேலும் ஏக இறைவனை வணங்க வேண்டும் என்று எங்களுக்கு கட்டளையிட்டார். நாங்களும் அதனை ஏற்றுக் கொண்டோம். மேலும் அவரது போதனையின்படி நாங்கள் செயல்படுகின்றோம்.

இதன் காரணமாக எங்கள் சமுதாயம் எங்களுக்கு எதிராகி விட்டது. எங்களுக்கு துன்பம் இழைத்து வருகின்றது. அநீதிகளை இழைத்தது. அது உச்சத்தை அடைந்தவுடன் நாங்கள் எங்கள் நாட்டை விட்டு வெளியேறி உங்களின் அடைக்கலத்தில் வந்திருக்கின்றோம். ஏனென்றால் உங்களின் நீதி மற்றும் நேர்மையின் புகழை கேள்விபட்டுள்ளோம். அரசரே! இந்த நாட்டில் எங்கள் மீது எந்த அநீதியும் இழைக்கப்படாது என்று நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றோம் என்று கூறினார்கள். இதை வெவியேற்ற அரசர் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார். பின்னர் உங்களது தூதரின் மீது இறங்கிய அந்த இறை வேதத்தின் சில வசனங்களை எனக்கு ஓதிக் காட்டுங்கள் என்று கூறினார்.

சூரா மர்யமின் வசனங்களை நஜ்ஜாஸி அரசர் அழும் அளவிற்கு ஹஸ்ரத் ஜாபர் (ரலி) அவர்கள் மிக அழகிய குரலில் ஓதினார்கள். அதைக் கேட்ட நஜ்ஜாஸியின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. இறைவன் மீது ஆணையாக! இந்த வேதமும் ஹஸ்ரத் மூஸாவின் வேதமும் ஒரே ஊற்றிலிருந்து வெளிப்பட்டது போல தோன்றுகின்றது என்று கூறினார். பின்னர் அவர் மக்கத்து தூதுவர்களிடம், நான் இந்த மக்களை உங்களுடன் அனுப்பி வைக்க மாட்டேன் என்று கூறி விட்டார். இனி இவர்கள் இங்கு தான் இருப்பார்கள் என்றும் கூறினார். மக்கத்து தூதுவர்கள் அரசரிடம், இவர்கள் ஹஸ்ரத் ஈஸாவை கிறித்தவர்களின் கொள்கைக்கேற்ப ஏற்றுக் கொள்வதில்லை. அவரின் அந்தஸ்த்தை இவர்கள் குறைத்து மதிப்பிடுகின்றார்கள் என்று கூறினார். அப்போது அரசர் மீண்டும் முஸ்லிம்களை அழைத்தார். ஹஸ்ரத் ஈஸாவைப் பற்றிய கொள்கைகளைக் கேட்டு அறிந்தார்.

அப்போது ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஈஸா அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவார். அவரை அல்லாஹ் கன்னிப்பெண்ணான ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களுக்கு மகனாக வழங்கினான். அப்போது அந்த அரசர் நிலத்திலிருந்து ஒரு குச்சியை எடுத்தார். ஹஸ்ரத் ஈஸாவின் அந்தஸ்த்து என்பது இவர்கள் எடுத்துரைத்த கூற்றிலிருந்து இந்த குச்சியை விட கூடுதல் கிடையாது என்று கூறினார். முஸ்லிம்களிடம், இங்கு உங்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 539-541. முஸ்னது ஜா∴பர் பின் அபீ தாலிப் ஹதீஸ் 1740. பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் அச்சிடப்பட்டது) அன்னாரின் ஞானம் மற்றும் அகப்பார்வை மற்றும் அறிவு போன்றவை முஸ்லிம்கள் அங்கு தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தது.

ஒரு சஹாபி முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னாரின் தாய் பெரும் செல்வ சீமாட்டி ஆவார்கள். பெரும் செல்வச் செழிப்பில் அவர்கள் வளர்ந்து ஆளானார்கள். மிகவும் உயர் தரமான ஆடையை அணிந்து வந்தார்கள். மிக அழகிய இளைஞராக இருந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 62. முஸ்அப் பின் உமைர் (ரலி). பைரூத்திலுள்ள தாரே அஹ்யாயுத்துராஸுல் அரபியில் 1996 -ல் அச்சிடப்பட்டது)

ஸஅத் பின் அபி வக்காஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஸ்அப் அவர்களை நான் செல்வ செழிப்பிலும் கண்டுள்ளேன். முஸ்லிம் ஆன பிறகும் அன்னாரின் நிலைமையை கண்டுள்ளேன். அன்னார் இறை வழியில் பெரும் துக்கங்களை சகித்துக் கொண்டார்கள். ஸஅத் அவர்கள் கூறுகின்றார்கள். செல்வச் செழிப்பில் வளர்ந்து ஆளாகிய அதே இளைஞனின் தோல் கடினத்தின் காரணமாக பாம்பின் தோல் உரிவது போன்று உரிந்தது. (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 388. முஸ்அப் பின் உமர் (ரலி) . பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 -ல் அச்சிடப்பட்டது)

ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களை இந்நிலையில் கண்டார்கள். அதாவது ஒரு சபையில் ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் தோலினால் ஆன உடையை அணிந்து வந்ததைக் கண்டார்கள். துணியினாலான ஆடை அன்னாரிடம் இல்லாமல் இருந்தது. அதைக் கண்டதும் சஹாபாக்கள் வெட்கத்தால் பார்வையை தாழ்த்திக் கொண்டார்கள். ஏனென்றால் அன்னாரின் முந்தைய செல்வச் செழிப்பின் நிலையை அவர்கள் பார்த்திருந்தார்கள். ஆயினும் அன்னாருக்கு உதவி செய்ய இயலாதவர்களாக இருந்தார்கள். சபையில் வந்து ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் ஸலாம் கூறியதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மிக அன்புடன் பதிலளித்தார்கள். இந்த செல்வந்தரின் முந்தைய நிலைமை மற்றும் தற்போதைய நிலைமையை பார்த்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. பின்னர் அன்னாருக்கு ஆறுதல் அளித்தவாறு, அல்ஹம்துலில்லாஹ். உலகவாதிகளுக்கு உலகம் கிடைக்கட்டும். நான் மஸ்அப் அவர்களை மக்கத்து நகரத்திலும் பார்த்திருக்கின்றேன். அப்போது அன்னாரை விட செல்வந்தர் எவரையும் கண்டதில்லை. இவர் தமது தாய் தந்தையரின் மிக அன்புமிக்க பிள்ளை ஆவார். அவருக்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் தேவையான அனைத்து அருட்கொடைகளும் கிடைத்திருந்தன. ஆனால் இறைத்தூதரின் மீதான அன்பானது அவரை எந்த நிலையில் கொண்டு வந்து விட்டுள்ளது என்றால் அவர் அல்லாஹ்வின் திருப்திக்காக அனைத்தையும் விட்டு விடுவதற்கு தயாராகி விட்டார். பின்னர் இறைவன் இவரது முகத்திற்கு ஒளியை வழங்கி விட்டான் என்று கூறினார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 62. முஸ்அப் பின் உமைர் (ரலி). பைரூத்திலுள்ள தாரே அஹ்யாயே துராஸுல் அரபியில் 1996 -ல் அச்சிடப்பட்டது. கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 582 ஹதீஸ் 37494)

ஹஸ்ரத் முஸ்அப் அவர்களுக்கு தப்லீக் செய்வதற்கும் மிக அதிக ஆர்வம் இருந்தது. மிக அன்புடன் தப்லீக் செய்து வந்தார்கள். எனது விஷயங்கள் பிடித்திருந்தால் கேளுங்கள். பிடிக்கவில்லை என்றால் கேட்காதீர்கள் என்று கூறுவார்கள். இவ்வாறு மதீனாவின் அறியாத நபர்களுக்கும் கூட உண்மையின் தூதுச் செய்தியை கொண்டு சேர்த்தார்கள். ஏராளமான மக்கள் அன்னாரின் தப்லீக்கின் மூலமாக முஸ்லிமானார்கள். (சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 311)

ஹஸ்ரத் ஸஅத் பின் ரபி அவர்கள் ஓர் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு சகோதரத்துவ உறவு முறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள். இவருக்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களை சகோதரராக ஆக்கினார்கள். அன்னாரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். நல்ல விருந்து உபசரிப்பு செய்தார்கள். இந்த சகோதர உறவை அதிகரிக்கச் செய்வதற்காக எனது உள்ளம் இவ்வாறு விரும்புகின்றது. நான் எனது சொத்தில் பாதியை உங்களுக்கு கொடுத்து விட விரும்புகின்றேன். எனக்கு இரண்டு மனைவிமார்கள் இருக்கின்றார்கள். நீங்கள் அவர்களில் யாரை விரும்புகின்றீர்களோ அவருக்கு நான் தலாக் கொடுத்து விடுகின்றேன். நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். இது அன்னாரின் ஈமானுக்கான அடையாளமாகும். உங்களது சொத்தும், செல்வமும், உங்களது மனைவிமார்களும் உங்களுக்கு அருளுக்குரியதாக இருக்கட்டுமாக. அல்லாஹ் அதில் பரக்கத் செய்வானாக. நான் ஒரு வியாபாரி ஆவேன். நான் எனது வாழ்க்கையை நடத்திக் கொள்வேன். எனக்கு நீங்கள் கடை வீதிக்கான வழியை மட்டும் காட்டுங்கள். உங்களது உணர்வுகளுக்கு நான் மிகவும் நன்றி கூறிக் கொள்கின்றேன். (சஹீஹ் புகாரி கிதாபுல் மனாகிபுல் அன்ஸார். பாபு அஹாஹுன்னபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பய்னல் முஹாஜிரீன வல் அன்ஸார் ஹதீஸ் 3780-3781)

பின்னர் வியாபாரம் செய்தார்கள். ஒரு காலத்தில் அவர்கள் செல்வச் செழிப்புள்ள வியாபாரிகளில் ஒருவராக இருந்தார்கள். லட்சக்கணக்கான கோடிக்கணக்கான அளவில் பணம் சம்பாதித்தார்கள். ஹஸ்ரத் சஅத் பின் ரபி அவர்கள் உஹது போரிலும் பங்கு பெற்றிருந்தார்கள். அதில் ஷஹீதும் ஆகி இருந்தார்கள். அன்னாரைப் பற்றிய சம்பவம் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் பின் ரபி அவர்களை கண்டறியும்படியும் கூறினார்கள். அவர் போர்க்களத்தில் எதிரிகளால் சுற்றி வளைக்கப் பட்டதை நான் கண்டேன் எனவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார். நான் ஹஸ்ரத் சஅத் அவர்களை அழைத்தவாறு சென்றேன். சஅத் அவர்களை அடைந்ததும் அவர் உடல் முழுவதும் காயங்கள் இருப்பதை கண்டேன். மேலும் ஓரிடத்தில் விழுந்து கிடப்பதையும் நான் கண்டேன். மேலும் என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் அனுப்பி வைத்தார்கள் என்றும் நான் அவரிடம் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு ஸலாம் கூறினார்கள். உங்களைப் பற்றி விசாரித்தார்கள் என்றும் நான் கூறினேன். அப்போது ஹஸ்ரத் சஅத் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எனது ஸலாத்தையும் கூறவும். மேலும் எனக்கு ஈட்டிகளாலும், அம்புகளாலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. வெளிப்படையில் நான் உயிர் பிழைப்பது வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. மேலும் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறவும். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதற்கு முன் எத்தனை நபிமார்கள் உலகிற்கு வந்து சென்றார்களோ அவர்களுக்கு தத்தமது சமுதயாத்தின் மூலமாக எந்த அளவிற்கு அவர்களின் கண்களுக்கு குளிர்ச்சி அடைந்ததோ அதை விட அதிகமாக அல்லாஹ் எங்கள் மூலமாக உங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிப்பானாக.

பின்னர் எனது சமுதாயத்திடம் எனது ஸலாத்தை எட்ட வைத்து இவ்வாறு கூறவும். எதுவரை இறைத்தூதர் உங்களிடம் இருப்பாரோ அதுவரை அந்த அமானிதத்தை நீங்கள் பாதுகாப்பது உங்கள் மீது கடமையாகும். நினைவில் கொள்ளுங்கள். உங்களில் ஒரு நபர் உயிருடன் இருக்கும் நிலையிலும் நீங்கள் அந்த அமானிதத்தை பாதுகாப்பதில் குறை வைத்தால் கியாமத் நாளன்று இறைவன் முன்னிலையில் உங்களின் எந்த காரணமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இந்த தூதுச் செய்தியைக் கூறி அன்னார் இந்த உலகை விட்டு பிரிந்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 214. சஅத் பின் ரபீயு அன்ஸாரி (ரலி). பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 -ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸைத் பின் அஸீர் அவர்கள் அன்ஸாரி ஸஹாபி ஆவார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் மூலமாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. இவர்களின் ஆன்மீக நிலைகளைப் பற்றி இவ்வாறு அறிவிப்பில் வருகிறது. அவர்கள் கூறுகின்றார்கள்.

எனது மூன்று நிலைகள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவதொரு நிலை கூட என்னிடம் நிலைத்திருக்கும் என்றால் நான் என்னை சொர்க்கவாசிகளில் ஒருவனாக கருதுவேன். முதலாவது விஷயம் என்னவென்றால், நான் திருககுர்ஆனை ஓதும்போது அல்லது வேறு எவராவது ஓதும் போது அதை கேட்கின்ற நிலையில் என்னிடம் அச்சத்தின் நிலை மேலோங்கி விடுகின்றது. திருக்குர்ஆனை செவி மடுப்பதால் ஏற்படுகின்ற இந்த நிலை எனது நிரந்தர நிலையாக இருந்தால் நான் என்னை சொர்க்கவாசிகளில் ஒருவனாக கருதுவேன்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா வழங்குகின்ற போது நான் மிகவும் கவனத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவுரைகளை செவிமடுக்கின்றேன். அப்போது எனக்கு ஏற்படுகின்ற நிலை எனது நிரந்தர நிலையாக ஆகி விட்டால் நான் சொர்க்கவாசி –களில் ஒருவனாக ஆகி விடுவேன்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், நான் ஒருவரின் ஜனாஸாவில் கலந்து கொள்ளும் போது அந்த ஜனாஸா எனது ஜனாஸாவாகும் என்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. இந்த நிலை எனக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது. இந்த அச்சத்தின் நிலை எனது நிரந்தர நிலையாக ஆகி விட்டால் சொர்க்கவாசிகளில் ஒருவனாக என்னை நான் கருதுவேன். (மஜ்மஉல் ஸவாயிது தொகுதி 9 பக்கம் 378. ஹதீஸ் 15706. கிதாபுல் மனாகிபு பாபு மாஜாஅ ∴பீ உஸைது பின் ஹுஸைர். பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் 2001 -ல் வெளியிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும், இது அன்னாரின் சிறப்பான இறையச்சத்திற்கான அடையாளம் ஆகும். இந்த நிலை தான் மனிதனுக்கு அல்லாஹ் மீதான அச்சத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் அதன் விளைவாக மனிதன் நன்மைகளை மேற்கொள்ள முயற்சி செய்கின்றான். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் அல்லாஹ்வை நினைவு கொள்கின்றார். பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னாருக்கு ஏற்பட்ட இந்த நிலையே நிச்சயமாக அன்னார் சொர்க்கவாசியாக இருந்தார்கள் என்பதையும் அன்னார் இறை திருப்தியை பெறக் கூடியவராக இருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. அன்னாரின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் இறைவணக்கம் மற்றும் தொழுகையின் மீதான நேசம் ஆகும். அன்னார் தனது முஹல்லாவின் இமாமாக இருந்தார்கள். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் தொழுகைக்காக பள்ளிக்கு வருகை தருவார்கள். சில முறை நின்று தொழுவது அன்னாருக்கு கடினமாக இருந்தாலும் கூட பள்ளிக்கு வருகை தந்து அமர்ந்து பள்ளியிலேயே தொழுகையை நிறைவேற்றுவார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 307. உஸைது பின் ஹுஸைர். பைரூத்திலுள்ள தாரே அஹ்யாயுத்துராஸுல் அரபியில் 1996 -ல் அச்சிடப்பட்டது) இதன் மூலம் ஜமாஅத்தாக தொழுவதற்குரிய நற்கூலியை இழந்து விடக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்தார்கள். இதுவே இந்த மக்களின் நிலையாக இருந்தது. இதுவே அந்த தொழுகையாளிகளின் முன்னுதாரனம் ஆகும்.

அன்னாருடைய ஆலோசனைகளும் மிகச் சிறப்பானதாக இருந்தன. மிக உயர் தரமான ஆலோசனைகளை வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸைத் (ரலி) அவர்களின் ஆலோசனை வந்த பிறகு இனி கருத்து வேறுபாடு ஆகுமானதல்ல என்று கூறி வந்தார்கள். அதே போன்று ஹஸ்ரத் அபூபக்கர் மற்றும் ஹஸ்ரத் உமர் ஆகியோரின் கிலாஃபத் காலகட்டத்தையும் இவர்கள் கண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலேயே இவர்கள் மரணமடைந்தார்கள். கிலாஃபத்திற்கு அசாதாரணமான முறையில் கட்டுப்படுவதற்கான செயல் முன்மாதிரியையும் அன்னார் வெளிப்படுத்தினார்கள். அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். தமது கோத்திரத்திடம் மதினாவின் வேறு எந்தவொரு கோத்திரமும் கருத்து வேறுபாடு கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் நாம் எந்த கருத்து வேறுபாடும் கொள்ளக்கூடாது. ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும். என்று அன்னார் கூறினார்கள். (அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 130-131. உஸைது பின் ஹுஸைர் (ரலி). பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 -ல் அச்சிடப்பட்டது)

அடுத்து மற்றொரு அன்ஸாரி ஸஹாபி அபீ பின் கஅப் அவர்கள் ஆவார்கள். அன்னாரும் செயல் முன்மாதிரியைக் கொண்ட அறிஞர் ஆவார்கள். மிக பேணுதலுடன் ஐவேளை தொழுகைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிறைவேற்றி வந்தார்கள். தொழுகைகளை பேணுவது தொடர்பான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலை அன்னார் அறிவிக்கின்றார்கள்.

ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்கு வராத சில நபர்களைக் குறித்து அவர்கள் ஏன் தொழுகைக்கு வரவில்லை ? என்று வினவினார்கள். பின்னர் அன்னார் கூறினார்கள். இரண்டு தொழுகைகள் எப்படிப்பட்டதென்றால் அது பலவீனமான நம்பிக்கை கொண்ட மக்கள் மற்றும் நயவஞ்சகர்களுக்கு மிகவும் சுமையானதாக இருக்கும். இவர்களுக்கு இந்த தொழுகைக்கு எத்துனை நற்கூலி இருக்கிறது என்பது தெரிய வந்தால் நிச்சயமாக அவர்கள் தமது முழங்கால்களில் தவழ்ந்து வர நேரிட்டாலும் இந்த தொழுகைகளில் கலந்து கொள்வார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 135 ஹதீஸ் 21587. முஸ்னதுல் அன்ஸார் ஹதீஸ் அபீ பஷீரத்துல் அப்தி. பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் அச்சிடப்பட்டது) ஃபஜ்ர் மற்றும் இஷா என்ற இரண்டு தொழுகைகள் தொடர்பாக குறிப்பாக அன்னார் கவனமூட்டி –யுள்ளார்கள்.

சில பிரச்சனைகளுக்கு அன்னார் வழங்கிய தீர்வு தொடர்பாகவும் அறிவிப்புகள் உள்ளன. ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஒரு முறை ஒரு நபர் ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்களிடம் கேள்வி கேட்டார். பயணத்தின் போது எனக்கு ஒரு சாட்டை கிடைத்துள்ளது. அதாவது ஒட்டகங்களை அல்லது குதிரைகளை விரட்டுவதற்கு தேவைப்படும் சாட்டை கிடைத்துள்ளது. அதனை நான் என்ன செய்ய வேண்டும் ? என்று கேட்டார். ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள், இது வெறும் சாட்டைதான் என்று பதிலளித்தார்கள். .

எனக்கு ஒரு முறை நூறு தினார்கள் வழிப்பாதையில் கடைத்தன. நான் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று கேட்டேன். எவராலோ தொலைக்கப்பட்ட பொருள் ஒன்று எனக்கு கிடைத்துள்ளது. இதனை நான் என்ன செய்வது என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் ஒரு வருடம் வரை அதைப்பற்றிய அறிவிப்பை செய்து வாருங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு எனக்கு ஒரு பொருள் கிடைத்துள்ளது. இது எவருடையதோ அவர் வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவிப்பு செய்யும்படி கூறினார்கள். ஒரு வருட அறிவிப்பிற்குப் பிறகும் கூட எவரும் வராததினால் நான் அந்த நூறு திர்ஹம்களை எடுத்துக் கொண்டு மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களிடம் சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்னும் ஒரு வருடம் அறிவிப்பு செய்து வாருங்கள். அந்த அடிப்படையில் மீண்டும் ஒரு வருடம் அறிவிப்பு செய்த போது எவரும் வராததால் நான் மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று கேட்டேன். வருடம் கழிந்து விட்டது. எவருமே வரவில்லை என்று கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னொரு வருடம் மீண்டும் அறிவிப்பு செய்து வாருங்கள் என்று கூறினார்கள். மூன்றாவது வருடமும் அறிவிப்பு செய்த பிறகு எவருமே வராததால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான்காவது முறையாக நான் கேட்டேன். அப்போது நிச்சயமாக இனி இந்த தினார்களை நீங்களே பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபு ஃபில் லுக்தா பாபு ஹல் அஹஸுஸ் லுக்ததி ஹதீஸ் 2437) ஆக, இதுவே அவர்களின் இறையச்சத்தின் தரமாகும்.

ஒரு முறை அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! நான் துஆ செய்கின்ற போது அதிகம் அதிகமாக உங்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும் என எனது உள்ளம் விரும்புகிறது. நான் துஆவின் நான்கில் ஒரு பகுதியை ஸலவாத் ஓதி வந்தால் அது சரி தானா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களது உள்ளம் எவ்வளவு விரும்புகின்றதோ அவ்வளவு ஸலவாத் ஓதுங்கள். நீங்கள் விரும்பினால் இதை விட அதிகமாகவும் ஸலவாத் ஓதலாம் என்று கூறினார்கள்.

அப்போது அபி பின் கஅப் அவர்கள், நான் பாதி நேரத்தில் ஸலவாத் ஓதி வந்தால் அது சரி தானா ? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் விரும்புகின்ற அளவிற்கு ஓதுங்கள். இதை விட அதிகமாக ஓதினாலும் நல்லது தான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள் கூறினார்கள். நான் இரண்டில் ஒரு பங்கு அளவிற்கு ஸலவாத் ஓதுவதில் கழித்தால் அது சரிதானா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவ்வளவு விரும்புவீர்களோ அவ்வளவு ஓதுங்கள். இதைவிடவும் அதிகமாகவும் ஓதலாம். தவறில்லை என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள் தனது உள்ளத்து ஆசையை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது துஆவிற்கான நேரத்தில் வெறும் ஸலவாத் மட்டுமே ஓதுவதை விரும்புகின்றேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். துஆக்களின் பெரும்பான்மையான நேரத்தை ஸலவாத் ஓதுவதில் கழித்து வந்தால் அல்லாஹ் உங்களின் துக்கங்கள் மற்றும் துயரங்களை அகற்றுவதற்கு போதுமானவனாக ஆகி விடுவான். உமது பாவங்கள் மன்னிக்கப்படும். மேலும் இந்த விஷயம் இறைவனின் பார்வையில் உங்களின் உயர் அந்தஸ்த்திற்கு காரணமாக ஆகி விடும். (சுனன் திர்மிதி. அப்வாபு ஸிஃபதுல் கியாமதி பாபு ஃபீ தர்கீபி பிஸிகிரில்லாஹி ஹதீஸ் 2457)

அன்னாருக்கு திருக்குர்ஆன் மீதும் அதிகமான நேசம் இருந்தது. அதிகமாக திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். அன்னாரின் நேர்மையும் அமானிதத்தை பேணுதலும் உச்சத்தை அடைந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை ஒரு முறை ஸக்காத் வசூல் செய்வதற்காக நியமித்தார்கள். மதீனாவிற்கு அருகில் இருந்த பனி அஸ்ரா மற்றும் பனி ஸஅத் ஆகிய இரு கோத்திரங்களிலும் ஸக்காத் வசூல் செய்ய அனுப்பி வைத்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள். நான் அங்கு சென்று ஸக்காத் வசூல் செய்தேன். திரும்பி வருகின்ற வழியில் மதீனாவிற்கு அருகில் ஒரு நல்ல நபரை சந்தித்தேன். அவரது அனைத்து ஒட்டகங்களுக்கும் ஒரு வருட பெண் ஒட்டகம் ஸக்காத் கணக்காக அமைந்தது. நான் அவரிடம் ஒரு வருட பெண் ஒட்டகத்தை ஸக்காத்தாக தாருங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ஒரு வயது பெண் ஒட்டகத்தை வைத்து நீங்கள் என்ன செய்வீர்கள்? அதில் உங்களால் பயணிக்கவும் முடியாது. அதன் மீது சுமையையும் சுமத்த முடியாது. நான் உங்களுக்கு ஸக்காத்தாக பெரிய வயதுடைய மற்றும் அழகிய துடிப்பான ஒட்டகத்தை தருகிறேன். அது உங்களுக்கு ஏதாவதொரு வகையில் பயன்படும் என்று கூறினார்.

அதற்கு அபி பின் கஅப் அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள். நான் ஒரு அமீன் ஆவேன். அமானிதங்கள் வசூலிப்பதற்காக வந்துள்ளேன். என்னால் பெரிய வயதையுடைய பெண் ஒட்டகத்தை ஸக்காத்தாக வசூல் செய்ய முடியாது என்று கூறினார்கள். ஆனால் அந்த நபரோ தூய இயல்பை உடையவராக இருந்தார். அவர் பெரிய வயதை உடைய ஒட்டகத்தை பெற்றுச் செல்லும்படி வற்புருத்தி வந்தார். அப்போது ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் நீங்கள் நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று பேசுங்கள். ஒட்டகத்தை அன்னாரிடம் ஒப்படைத்து விடுங்கள். அந்த அடிப்படையில் அந்த சஹாபியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று எல்லா விஷயத்தையும் கூறினார். இந்த பெரிய ஒட்டகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரின் தியாகத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் நீங்கள் உங்களின் உள்ளங்களிலுள்ள விருப்பத்துடன் ஒட்டகத்தை கொடுக்க விரும்புகின்றீர்கள் என்றால் கொடுக்கலாம். கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அதற்கான சிறந்த நற்கூலியை வழங்குவான் என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 139-140 ஹதீஸ் 21603. முஸ்னது அபீ பின் கஅப். பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் அச்சிடப்பட்டது) ஹஸ்ரத் அபி பின் கஅப் அவர்கள் ஞானம் படைத்த மனிதராக இருந்தார்கள். திருக்குர்ஆனைப் பற்றிய அறிவும் அன்னாருக்கு மிக அதிகம் இருந்தது. அன்னாரின் சபைகளில் அறிவார்ந்த விஷயங்களே அதிகம் பேசப்பட்டது. மிக உயர்ந்த அந்தஸ்து அன்னாருக்கு இருந்தது. அந்த சஹாபாக்களின் உயர்ந்த அந்தஸ்தின் அருட்கள் இன்றும் தொடர்கின்றன. இன்றும் நாம் அதிலிருந்து பலன் பெற்று வருகின்றோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த அளவிற்கு சஹாபாக்கள் உண்மையையும், நன்றியுணர்வையும்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷைத்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்-கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

வெளிப்படுத்தும் வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அப்படி என்ன இருந்தது? அவர்கள் சிலை வணக்கத்திலிருந்து முகம் திருப்பியதோடு மட்டுமல்லாமல் படைப்பினங்களை வணங்குவதிலிருந்தும் விலகிக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் உலகத்தை தேடுவதே அந்த சஹாபாக்களின் உள்ளங்களிலிருந்து விலகிப் போனது. அவர்கள் இறைவனை பார்க்கத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் மிகவும் உத்வேகத்துடன் இறை வழியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் இப்ராஹீமாக இருந்தார்கள். அவர்கள் முழுமையான கலப்பற்ற தன்மையுடன் இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு எப்படிப்பட்ட பணிகளை செய்தார்கள் என்றால் அவர்களுக்குப் பிறகு அதற்கு நிகரான உதாரணமே இல்லை என்று கூறலாம். மிக மகிழ்ச்சியுடன் இறை வழியில் அறுக்கப்படுவதை ஏற்றுக் கொண்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் இதுவரை ஷஹாதத் எனும் பானத்தை அருந்தாத சில சஹாபாக்கள் தமது விசுவாசத்தில் ஏதோ குறை உள்ளது என்ற எண்ணத் தொடங்கினார்கள். இதைப் பற்றி இந்த வசனத்தில் இவ்வாறு வருகிறது. مِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ அதாவது, சிலரோ ஷஹீதாகி இருந்தார்கள். இன்னும் சிலரோ எப்போது ஷஹீதாவோம் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தனர். (33:24)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சஹாபாக்களுக்கு மற்றவர்களைப் போன்று ஆசைகள் இல்லாமல் இருந்தனவா? பிள்ளைகள் மீதான அன்பும் ஏனைய தொடர்புகளும் அவர்களுக்கு இல்லாமல் இருந்தனவா? என்று மக்கள் சிந்திக்க வேண்டும். ஆனால் இந்த ஈர்ப்பானது அவர்களை எப்படி அன்பில் தழைத்தவர்களாக ஆக்கி விட்டது என்றால் அவர்கள் எல்லா விஷயங்களையும் விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். (மல்.ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 137-138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்காவில் அமர்ந்து கொண்டு இந்த குறைஷிய நம்பிக்கையாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தார்கள். அந்த உதவியில் வேறு எந்தவொரு சமுதாயத்தின் நபரும் பங்கு பெறவில்லை. ஓர் இருவரைத் தவிர. அதை ஈமானிய ஆற்றல் மற்றும் இறை ஆற்றலின் உதவியுமே அதில் பங்கு வகித்தது. எந்த வாளும் உறையிலிருந்து வெளியில் எடுக்கப்படவில்லை. எந்த ஈட்டியையும் கையில் ஏந்தப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் பௌதீகமான முறையில் சண்டையிடுவது முற்றிலும் தடுக்கப்பட்டிருந்தது. ஈமானிய ஆற்றலும் இறை ஞானம் எனும் ஒளிமயமான ஆயுதங்களாக இருந்தன. மேலும் பொறுமையும், உறுதிப்பாடும், கலப்பற்ற தன்மையும், அன்பும், விசுவாசமும், நன்றியுணர்வும், இறைஞானமும், உண்மையான மார்க்கத்தின் அறிவும் அவர்களிடம் கூர்மையான ஆயுதங்களாக இருந்தன. அந்த ஆயுதங்களை அவர்கள் மக்களிடம் காட்டி வந்தனர்.

ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு வந்தனர். கொலை மிரட்டலுக்கு ஆளாகினர். எல்லா புறமும் எல்லா வகையான இழிவையும் எதிர் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பேரன்பின் மயக்கத்தில் கிடந்தார்கள். எந்த பாதிப்பையும் பற்றி எந்த கவலையும் அவர்கள் படவில்லை. எந்த சோதனையைக் கண்டும் அவர்கள் அஞ்சவில்லை. உலக வாழ்க்கை என்ற அடிப்படையில் பார்த்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுமே இல்லாமல் இருந்தது. அதற்கு அவர்கள் ஏதேனும் ஒன்றுக்கு ஆசைப்பட்டு தமது உயிரையே ஆபத்தில் போடும் அளவுக்கு நபி (ஸல்) அவர்களிடம் என்ன இருந்தது? ஒன்றும் இல்லை. தனது சமுதாயத்தின் நீண்ட கால உறுதியான தொடர்பைக் கூட அவர்கள் முறித்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏழ்மையும், வறுமையும் மற்றும் கடினமான காலகட்டமே எஞ்சியிருந்தது. ஆயினும் சஹாபாக்கள் இந்த ஏழ்மையான அந்த நபரின் பின்னால் நின்று கொண்டார்கள். உண்மையில் அவர் மகத்துவ மிக்க அரசராக இருந்தார். மிகக் கடினமான காலகட்டத்திலும் இந்த சஹாபாக்கள் உண்மையுடனும், நன்றியுணர்வுடனும், விசுவாசத்துடனும் அன்னாரின் கரங்களை பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். எதிர்கால வெற்றிகளைப் பற்றி கற்பனை செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். அந்த சீர்திருத்தவாதியின் உயிர் கூட சில நாட்களில் சென்று விடும் என்ற சூழல் அப்போது இருந்தது. ஆயினும் இந்த சஹாபாக்களின் நன்றியுணர்விற்கான அந்த வெளிப்பாடு என்பது அப்படிப்பட்ட கடினமான காலத்தில் ஈமானிய ஆற்றலால் நிகழ்ந்து வந்தது. மிகவும் தாகித்த ஒருவன் இனிப்பான நீரூற்றின் முன்னால் எப்படி சென்று நிற்பானோ அப்படி சென்று அந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் நின்றார்கள். (இஸாலே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 151-152 அடிக்குறிப்பு)

சிர்ருல் கிலாஃபா என்ற நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

اِعْلَمُوْا رَحِمَكُمُ اللهُ اَنَّ الصَّحَابَةَ كُلَّهُمْ كَانُوْا كَجَوَارِحِ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّم وَفَخْرِ نَوْعِ الْاِنْسَانِ فَبَعْضُهُمْ كَانُوْا كَالْعُيُوْنِ وَبَعْضُهُمْ كَانُوْا كَالْآذَانِ وَبَعْضُهُمْ كَالْأَيْدِيْ وَبَعْضُهُمْ كَالْأَرْجُلِ مِنْ رَّسُوْلِ الرَّحْمَانِ وَكُلَّ مَا عَمِلُوْا مِنْ عَمَلٍ أَوْ جَاهَدُوْا مِنْ جَهْدٍ فَكَانَتْ كُلُّهَا صَادِرَةً بِهٰذِهِ الْمُنَاسَبَاتِ وَكَانُوْا يَبْغُوْنَ بِهَا مَرْضَاةَ رَبِّ الْكَائِنَاتِ رَبِّ الْعَالَمِيْنَ

இதன் மொழியாக்கம் இவ்வாறாகும்: அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அனைத்து சஹாபாக்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உடல் உறுப்புகளுக்கு ஒப்பானவர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்கு ஒப்பானவர்களாக இருந்தனர். சிலர் அன்னாரின் காதாக இருந்தார்கள். சிலர் கையாக இருந்தார்கள். சிலர் பாதங்களாக இருந்தார்கள். இந்த சஹாபாக்கள் என்னென்ன பணிகளை செய்தார்களோ அவை அனைத்தும் அந்த அந்த உடல் உறுப்புகளுக்கேற்ப வெளிப்பட்டன. அகில உலகங்களுக்குமான இறைவன் மற்றும் இந்த பிரபஞ்சத்தின் இறைவனின் திருப்தியை பெறுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. (சிர்ருல் குல.ஃபா. ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 341)

அல்லாஹ் இந்த ஒளிமயமான நட்சத்திரங்களின் முன்மாதிரிகளின்படி நடந்தவாறு நம்மை அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது அன்பு செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் நம்முடைய ஒவ்வொரு அமலும் அல்லாஹ்வின் திருப்திக்குரியதாக அமையட்டுமாக.

நான் தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகை ஒன்றை நடத்துவேன். அது ஹாலாந்து நாட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய அரீஷா டீஃபன் தாலர் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் மதிப்பிற்குரிய ஃபஹீம் டீஃபன் தாலர் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். அன்னார் பெனின் நாட்டில் வசித்து வந்தார்கள். டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி திடீரென இதயம் செயலிழந்ததால் பெனின் நாட்டிலேயே தனது 62 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

கல்வியை நிறைவு செய்த பிறகு ஒரு துறையில் பணி செய்து வந்தார்கள். 2002 ஆம் ஆண்டு இருவடைய திருமணம் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் ஒப்புதலுடன் டட்ச் நாட்டைச் சார்ந்த ஃபஹீம் தாலர் சாஹிப் அவர்களுடன் நடைபெற்றது. அப்போது மர்ஹூமா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் ஜமாஅத்தின் மீது ஆர்வம் கொண்டிருந்தார்கள். திருமணத்திற்குப் பிறகு ரமலான் மாதத்தில் சோதித்துப் பார்ப்பதற்காக நோன்பும் நோற்றார்கள். அன்னாரின் கணவர் டச்சு நாட்டைச் சார்ந்தவர். அன்னார் அஹ்மதி ஆவார்.

அவர் கூறுகின்றார். ஒரு முறை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்கள் அழத் தொடங்கி விட்டார்கள். நான் ஏதோ கடினமாக பேசி விட்டேன் என எண்ணினேன். ஆனால் பின்னர் மர்ஹூமா என்னிடம் கூறினார்கள். அவர்கள் தனது நிலையை அஹ்மதிய்யத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பின்னர் எனக்கும் அஹ்மதிய்யத்திற்கும் நிறைய இடைவெளி உள்ளது. என்னால் ஒருபோதும் அஹ்மதி முஸ்லிமாக முடியாது என்று நான் எண்ணினேன். அந்த இழப்பிற்கான உணர்வு தான் எனக்கு அழுகையை வரவழைத்தது என்று அன்னார் கூறினார்கள்.

ஃபஹீம் சாஹிப் அவர்களுடன் மர்ஹூமா கேம்பியா சுற்றுப் பயணத்தில் சென்றார்கள். அங்கு ஜமாஅத்தின் பணிகளை அவர் கண்டார். அது

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

St. Thomas Mount ஜமாஅத்தைச் சார்ந்த ஜனாப் S.M. முஸ.ஃப்பர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் ஜனாப் சலீம் அஹ்மது M.A.,M.L. (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்) அவர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் 19.10.2017 வியாழக்கிழமை அன்று பெண் குழந்தை பிறந்துள்ளது - அல்ஹம்துலில்லாஹ். ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அந்தப் பெண் குழந்தைக்கு *ரீதா சலீம்* எனப் பெயர் வைத்துள்ளார்கள். அனைவரும் துஆ செய்யவும்.

*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

செய்பவர்களுடன் முஸா.்.பா செய்தார்கள். நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய மவ்லவி முர்ஸிது அஹ்மது தார் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். பிறகு, ஓதப்பட்ட வசனங்களின் மொழியாக்கத்தை படித்தார்கள். அதன் பிறகு மதிப்பிற்குரிய நாஸிர் அ்.லா சாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்:

“எல்லா பணியாளர்களும் ஒரு வகையில் ஓர் இயந்திரத்திலுள்ள பல பாகங்களைப் போன்ற -வர்கள் ஆவர். எதுவரை எல்லா பாகங்களும் சரியான முறையில் இயங்கி வருமோ அதுவரை முழு அமைப்பும் சரியாக இருக்கும்.” ஆண்டு மாநாட்டின் எல்லா பணிகளையும் சிறந்த முறையில் செய்து முடிப்பதற்காக ஏறக்குறைய 24 -க்கும் அதிகமான துறைகள் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் எல்லா துறைகளைச் சார்ந்த அமைப்பாளர்களும் நாஸிம்களும் கலந்து கொண்டனர். நாஸிர் சாஹிப் அ்.லா அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்:

“பணியாளர்கள் பற்றிய ஆய்வு நடைபெறுகின்ற இந்நிகழ்ச்சியும் கூட ஜமாஅத்தின் முக்கியமான மரபுகளில் ஒன்றாக இருக்கின்றது. எங்கு ஹுஸூர் அவர்கள் இருக்கின்றார்களோ அங்கு சுயமே ஹுஸூர் அவர்களே ஏற்பாடுகளை பார்வை இடுகின்றார்கள். மற்ற இடங்களில் தமது பிரதிநிதிகளை அவர்கள் நியமிக்கின்றார்கள்.” நாஸிர் சாஹிப் அ்.லா அவர்கள் பணியாளர்களுக்கு போதனை செய்தவாறு இவ்வாறு கூறினார்கள். “எல்லா பணியாளர்களும் எல்லா நேரமும் தங்களது டியூட்டிகளில் ஆஜராகி இருக்க வேண்டும். இரவு வெகு நேரம் வரை அவர்கள் விழித்திருந்தாலும் ்.பஜ்ர் தொழுகைக்கு கண்டிப்பாக வந்து கலந்து கொள்ள வேண்டும். துஆக்களிலும் அழுத்தம் காட்டுங்கள். அல்லாஹ் நம்மிடம் மகிழ்ச்சி அடைந்தால் விருந்தினரும் மகிழ்ச்சி அடைவர்.” பிறகு அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கட்டளைகளின் ஒளியில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக் கூறினார்கள். மேலும ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ்.பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் விருந்தோம்பல் தொடர்பாக கூறியுள்ள முக்கியமான கட்டளைகளைப் படித்துக் காட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய சுஹைப் அஹ்மது சாஹிப் (ஆண்டு மாநாட்டு அதிகாரி) மதிப்பிற்குரிய முஸ.்.ப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் (மாநாட்டுத் திடலின் அதிகாரி) மதிப்பிற்குரிய கே. தாரிக் அஹ்மது சாஹிப் (படைப்பின சேவை அதிகாரி) மற்றும் ஏனைய எல்லா துணை அதிகாரி -களும் மேடையில் அமர்ந்திருந்தனர். எல்லா நாஸிம்களும் விருந்தோம்பல் செய்பவர்களும் தமது துணை அதிகாரிகளுடனும் தமக்கு ஒத்துழைப்பு நல்குபவர்களுடனும் மேடைக்கு முன்னால் வரிசையாக தத்தமது துறைகளுக்கான வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஏறக்குறைய 20 நிமிடங்கள் வரை சொற்பொழிவு நிகழ்த்திய பிறகு மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் அ்.லா அவர்கள் நிகழ்ச்சியின் இறுதியில் துஆ செய்து வைத்தார்கள். நிகழ்ச்சி முடிந்த பிறகு மதிப்பிற்குரிய நாஸிர் அ்.லா சாஹிப் அவர்கள் மாநாட்டுத் திடல், தங்குமிடங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு நடத்தினார்கள்.

**(29 டிசம்பர் 2017 வெள்ளிக்கிழமை)**

**துவக்க அமர்வு:**

மிகவும் தொலை தூரப் பகுதிகளிலிருந்து வருகை தந்திருந்த அஹ்மதிய்யத்தின் மீது பேரன்பு கொண்டிருந்தவர்கள் காலையில் மாநாட்டுத் திடலின் வளாகத்தில் விரைவாக வந்து அமரத் தொடங்கினர். அவர்கள் துஆக்கள் செய்து கொண்டிருந்தனர். ஈமானின் எழுச்சியினால் ‘நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்’ என்ற முழக்கங்களைச் செய்து கொண்டிருந்தனர். இந்த காட்சி ஈமானுக்கு மிகவும் வலுவூட்டக்கூடியதாக இருந்தது.

**கொடியேற்றம்:**

ஜமாஅத்தின் மரபுகளுக்கு ஏற்ப ஒரு பாதுகாப்பான பெட்டியில் அஹ்மதிய்யத்தின் குத்தாம்களின் பாதுகாப்பில் அஹ்மதிய்யத்தின் கொடி மாநாட்டுத் திடலுக்குக் கொண்டு வரப்பட்டது. மதிப்பிற்குரிய ஹா.்.பிஸ் மக்தூம் ஷரீ.்.ப் சாஹிப் (நாஸிர் நஸ்ரோ இஷாஅத், காதியான்), மதிப்பிற்குரிய வஸீம் அஹ்மத் ஸித்தீக் சாஹிப் (நாஸிர் பைத்துல் மால் ஆமது), மதிப்பிற்குரிய முஹம்மது நஸீம் கான் சாஹிப் (வகீலுத் த.்.ப்ஸீர்), மதிப்பிற்குரிய மவ்லானா இனாயத்துல்லாஹ் சாஹிப் (கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் த.்.லீமுல் குர்ஆன் வக.்.பே ஆர்ஸி), மதிப்பிற்குரிய கே. தாரிக் அஹ்மது சாஹிப் (சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, இந்தியா) ஆகியோர் அஹ்மதிய்யத்தின் கொடியுடன் இருந்தனர்.

காலை சரியாக 10 மணி 8 நிமிடம் ஆன போது மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்து கூட்டுத் துஆ செய்து வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட போது மேடையிலிருந்து ஒலிபெருக்கி மூலமாக

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ
وَتُبْ عَلَيْنَا اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ

என்ற துஆ திரும்ப திரும்ப ஓதப்பட்டது. மாநாட்டில் திடலிலிருந்த அனைவரும் இந்த துஆக்களை முழுமையான எழுச்சியுடனும் உருக்கத்துடனும் திரும்ப திரும்ப கூறினர்.

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவரான மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்களின் தலைமையில் முதலாவது அமர்வு ஆரம்பமானது. திருக்குர்ஆன் ஓதப்பட்ட பிறகு அமர்வின் தலைவர் அவர்கள் தமது துவக்க உரையில் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அனைவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குரலுக்கு செவிசாய்த்தவாறு அல்லாஹ்வுக்காக இங்கு வருகை தந்துள்ளீர்கள். இதற்காக நான் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அமர்வின் தலைவர் அவர்கள் ஆண்டு மாநாட்டின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் பற்றி எடுத்துக் கூறியவாறு ஆண்டு மாநாடு தொடர்பாக ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய கட்டளைகளை எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த மாநாட்டை ஒரு சாதாரண மனிதர்களின் மாநாடு போன்று கருத வேண்டாம். இது எத்தகைய ஒரு விஷயம் என்றால், இதன் அடித்தளமானது முழுக்க முழுக்க உண்மைக்கு ஆதரவாகவும் இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதற்காகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த இயக்கத்தின் அடிக்கல்லை இறைவன் தனது கைகளால் நட்டி இருக்கின்றான். இதற்காக அவன் சமுதாயங்களை ஆயத்தப்படுத்தியுள்ளான். அவை விரைவாக இதில் வந்து விடும். ஏனென்றால், இது அந்த வல்லமைமிக்க இறைவனின் செயலாகும். அவனுக்கு முன்னால் நடப்பதற்கு சாத்தியமற்ற எதுவுமே இல்லை.

இந்த மாநாட்டின் நோக்கமும் அசல் குறிக்கோளும் இதுவாகும்: அதாவது நமது ஜமாஅத்தைச் சார்ந்த மக்கள் எப்படியாவது மீண்டும் மீண்டும் சந்திப்பதன் மூலமாக தங்களுக்குள் எத்தகைய ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்றால் அவர்களது உள்ளம் மறுமையின் பக்கம் முற்றிலுமாக குனிந்து விட வேண்டும். அவர்களிடம் இறைவன் மீதுள்ள அச்சம் உருவாக வேண்டும். இறையச்சம், தீமைகளில் இருந்து விலகுவது ஆகியவற்றிலும் மென்மையான உள்ளம், பரஸ்பரம் தங்களுக்கிடையில் அன்பையும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்திக் காட்டு -வதிலும் அவர்களில் ஒருவர் மற்றவருக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பணிவு, நற்குணம் மற்றும் நேர்மை அவர்களிடம் உருவாக வேண்டும். தமது மார்க்கப் பணிகளில் அவர்கள் முழுமையாக ஈடுபட வேண்டும்.

இந்த மாநாட்டில் எத்தகைய உண்மைகளும் இறைஞானமிக்க விஷயங்களும் எடுத்துக் கூறப்படும் என்றால் அது ஈமான், நிச்சய உறுதி, மற்றும் இறை ஞானம் ஆகியவற்றில் ஒருவர் முன்னேறுவதற்கு அவசியமானவையாகும். இந்த மாநாட்டினால் ஒரு தற்காலிக பயனும் ஏற்படும். அதாவது, ஒவ்வொரு புது வருடத்திலும் எந்த அளவு அதிகமாக புதிய சகோதரர்கள் இந்த ஜமாஅத்தில் இணைவார்களோ அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் மாநாட்டில் கலந்து கொண்டு தமக்கு முன்னதாக இந்த ஜமாஅத்தில் இருந்து வருகின்ற பழைய சகோதரர்களின் முகத்தைப் பார்ப்பார்கள். அவர்களில் ஒருவர் மற்றவரை அடையாளங்கண்டு கொள்வது மூலமாக பரஸ்பரம் அவர்களுக்கு இடையில் அன்பு மற்றும் அறிமுகத்தின் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1905 ஆம் ஆண்டு வஸிய்யத் அமைப்பை துவக்கி வைத்தார்கள். அதன் முக்கியமான நோக்கம் ஒரு தூய ஜமாஅத்தின் அணியை நிறுவுவதாகவே இருந்தது. சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவர் அவர்கள் தமது சொற்பொழிவில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல மஸீஹின் கட்டளை ஒன்றை படித்துக் காட்டியவாறு வஸிய்யத் அமைப்பானது இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாக இருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்பொழிவான ‘நிஸாமே நவ்’ என்ற நூலில் இருந்து மேற்கோள்களைப் படித்துக் காட்டி வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவத்தையும் அருள்களையும் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

அதற்குப் பிறகு காதியானிலுள்ள நூர் மருத்துவமனை கடந்த நூறு ஆண்டுகளாக செய்து வருகின்ற தொண்டுகளை விளக்கம் வகையில் அமைந்துள்ள சிறப்பிதழ் ஒன்றை வெளியிடுகின்ற அதன் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சிறப்பிதழின் பெயர் ‘அந்நூர்’ ஆகும்.

தலைமையக நாஸிர் த.்.வத்தே இலல்லாஹ் மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்கள் காதியானிலுள்ள நூர் மருத்துவமனை ஆற்றியுள்ள தொண்டுகளை எடுத்துக் கூறியவாறு சிறப்பிதழ் பற்றி அறிமுகம் செய்து வைத்தார்கள். அமர்வின் தலைவரான சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவர் மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் நய்யர் சாஹிப் அவர்கள் சிறப்பிதழை வெளியிட்டார்கள். அப்போது அவர்களுடன் தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் அ.்.லாவான மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் அவர்களும் நூர் மருத்துவமனையின் நிர்வாகியான மதிப்பிற்குரிய டாக்டர் தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும் இருந்தனர். இதற்குப் பிறகு இந்த அமர்வின் தலைவர் அவர்கள் கூட்டுத் துஆ செய்தார்கள்.

*(தொடரும்....)*

### திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 1 February 2018 Issue No. 5

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(13-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவர்களின் மீது நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் பிறகு ஃபஹீம் சாஹிப் அவர்கள் அவரிடம் பைஅத் படிவத்தை கொடுத்தார்கள். பைஅத் நிபந்தனைகளை அவர் படித்தார். முதலில் இந்த படிவத்தில் என்னால் ஒரு போதும் கையெழுத்து இட முடியாது என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் பின்னர் அதை படித்த பிறகு உடனடியாக மார்ச் 18 ஆம் தேதி 2006 ஆம் ஆண்டு பைஅத் படிவத்தை பூர்த்தி செய்தார்கள். இவ்வாறு பைஅத்தின் கடிதத்தை எனக்கு எழுதினார்கள். கிலாஃபத்தின் மீது மர்ஹூமாவிற்கு ஆழமான அன்பு இருந்தது. ஜமாஅத் பணிகளில் தனது கணவருக்கு ஒத்துழைப்பு நல்கி வந்தார். ஹாலாந்து ஜமாஅத்தின் பிரஸ் செயலராகவும் இருந்து வந்தார். மொழியாக்கத்திலும் உதவி செய்து வந்தார். பின்னர் வஸிய்யத் திட்டத்தைப் பற்றி அன்னார் அறிந்த போதும் எனது குத்பாவைக் கேட்டு உடனடியாக வஸிய்யத்தும் செய்தார். 2009 ஆம் ஆண்டு மர்ஹூமா தனது கணவருடன் வக்ஃப் செய்து Humanity First என்ற அமைப்பின் கீழ் பெனின் நாட்டில் செயல்படும் அனாதை இல்லத்தை பராமரிப்பதற்காக மேற்கு ஆப்ரிக்காவிற்கு சென்று விட்டார்கள். வெளிப்படையில் ஒரு உணர்வுப்பூர்வமான முடிவாக அது இருந்தது. ஏனென்றால் மர்ஹூமா ஒரு நல்லவொரு பணியில் இருந்தார்கள். அதனை விட்டு விட்டு தான் அவர்கள் அங்கு சென்றார்கள்.

ஹாலாந்து நாட்டின் முபல்லிக் இன்சார்ஜ் அவருக்கு புரிய வைப்பதற்கு முயற்சி செய்தார். ஆப்ரிக்காவின் சூழல் என்பது கடினமானதாகும். மன ரீதியாக அவர்கள் ஆயத்தமாவதற்காக அவ்வாறு கூறப்பட்டது. அப்போது மர்ஹூமா கூறினார்கள். முரப்பி சாஹிப், எனக்கு இதைசெயல்லாம் கூற வேண்டாம். நான் மிகவும் சிந்தித்து பார்த்து தான் முடிவெடுத்துள்ளேன். அவர்களின் உறவினர்களும் கூட கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தும் மற்ற கம்பெனிகளைப் போன்ற ஒரு கம்பெனி என்றே கருதினார்கள். எனவே அவர்கள் இந்த கம்பெனி திவாலாகி விடும். எதுவும் எஞ்சியிருக்காது. இங்கும் இல்லாமல் அங்கும் இல்லாமல் கடைசியில் மாட்டிக் கொள்ளாதே என்று உறவினர்கள் அவரிடம் கூறினர். அதற்கு மர்ஹூமா தமது உறவினர்களிடம் இவ்வாறு கூறினார்கள். அவர்களுக்கு மிக உறுதியான ஈமான் இருந்தது. எங்கள் ஜமாஅத் ஒன்றும் பிற கம்பெனிகளைப் போன்ற ஒரு கம்பெனி அல்ல. இது ஒருபோதும் திவால் ஆகவே முடியாது. இதைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியமும் இல்லை. நான் மரணித்து விட்டாலும் கூட இந்த அனாதை இல்லத்திலேயே நான் அடக்கம் செய்யப்படுவதையே நான் விரும்புவேன்.

மர்ஹூமா ஐரோப்பிய சமூகத்தில் வளர்ந்து ஆளாகி இருந்தார்கள். நல்ல பெரிய வேலையிலும் இருந்தார்கள். அவ்வாறிருந்தும் ஆப்ரிக்காவில் மிகக் கடினமான சூழ்நிலையிலும் மிகச் சிறப்பாக தனது வக்ஃபை முழுமை செய்தார்கள். மிகப் பொறுப்புணர்வுடன் தனது கடமையை நிறைவு செய்தார்கள். தொழுகைகளை பேணி வந்தார்கள். அஹ்மதியானதிலிருந்து தொடர்ந்து தவறாமல் தொழுகையை பேணினார்கள். பின்னர் தஹஜ்ஜுத் தொழுகையையும் பேண ஆரம்பித்தார்கள். ஒருபோதும் தொழுகையை கைவிட்டதில்லை. மாறாக, மற்றவர்களுக்கும் குறித்த நேரத்தில் தொழும்படி அறிவுறுத்தினார்கள். குத்பாவை மிக கவனத்துடனும், ஆர்வத்துடனும் கேட்டு வந்தார்கள். அறிவுரைகளை பேணி நடக்க முயற்சி செய்தார்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் மீதான அன்னாருக்கு இருந்த அன்பை இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் மீது முழுமையான முறையில் அமல் செய்யாத மக்களை அவர்கள் பார்த்தால் மிகவும் மனக்கவலை அடைந்து வந்தார்கள். அஹ்மதியான பிறகும் கூட ஏன் இந்த மக்கள் இஸ்லாத்தின் போதனையின் படி செயல்படவில்லை என வருத்தப்பட்டார்கள். திருக்குர்ஆன் தொடர்ந்து ஓதி வந்தார்கள். அதனை மொழியாக்கம் மற்றும் விளக்கவுரை –யுடன் புரிந்து கொள்ள முயற்சி செய்தார்கள். அவர்களுக்கு பிள்ளைகள் கிடையாது. அன்னார் அனாதை இல்லத்தின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். அங்கிருந்த பிள்ளைகளையே தனது பிள்ளைகளாக கருதினார்கள்.

Humanity First –ன் அஹ்மதி யஹ்யா சாஹிப் கூறுகின்றார். அங்கு Humanity First நடத்தி வரும் தாருல் இக்ராமை அதாவது, ஜமாஅத்தின் அனாதை இல்லத்தை காண்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அப்போது அங்கு இரண்டு மாதத்திலிருந்து 12 வயது வரையிலான அனாதை குழந்தைகள் இருந்தன. ஊழியர்கள் இருந்த போதிலும் இரண்டு மாத அனாதை கைக் குழந்தைகளை அன்னாரின் மடியில் எப்போதும் நான் பார்த்து வந்தேன். ஒரு குழந்தைக்கு உடல் நலம் சரியில்லாம் ஆகி விட்டால் மிகவும் கவலைக்கு உள்ளாகி விடுவார்கள். மருந்து மற்றும் உணவிற்கான ஏற்பாடுகளை உடனேயே செய்வார்கள். குழந்தையின் கல்வி அறிக்கையில் கவனமூட்டப்பட வேண்டிய விஷயம் எதுவும் இருந்தால் சிறந்த வழிமுறைகளில் அதனை சரி செய்வதற்கு மிகவும் கவலைப்படுவார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் தனிப்பட்ட உதவிக்கான தேவை ஏதும் உள்ளதா? என்று கேட்கும் போதெல்லாம் அவர்கள் எப்போதும் நாங்கள் வக்ஃப் செய்திருக்கின்றோம். அல்லாஹ்விற்கு மிகவும் நன்றி செலுத்துகின்றோம். அவன் எங்களுக்கு இந்த பாக்கியத்தை வழங்கி இருக்கின்றான். அனாதைப் பிள்ளைகளுக்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. நாங்கள் மிக மகிழ்ச்சியாக உள்ளோம். எங்களைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். ஆயினும் அனாதை இல்லத்தின் ஏற்பாடு ரீதியிலான ஏதாவதொரு விஷயம் இருந்தால் நிச்சயமாக அன்னார் எங்களுக்கு கவனமூட்டுவார்கள்.

அதே போன்று Humanity First Germany என்ற அமைப்பின் சேர்மேன் அத்ஹர் சுபைர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மர்ஹூமாவின் கணவர் ஃபஹீம் சாஹிப் அவர்கள் கூறினார்கள். ஆரம்பம் முதலே அவர்களுக்கு லாட்டரி விளையாடுவதில் மிகவும் ஆர்வம் இருந்தது. ஐரோப்பாவில் லாட்டரி விளையாட்டிற்கான ஒரு பழக்கம் உள்ளது. ஆனால் அவர்களுக்கு இஸ்லாத்தில் இதற்கு தடை உள்ளது என்று சொல்லப்பட்ட உடனேயே அதை கைவிட்டு விட்டார்கள். லாட்டரியில் செலவழித்து வந்த பணத்தை வார வாரம் பள்ளிவாசலில் சந்தாவாக கொடுக்க தொடங்கினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள். நான் சுற்றுப் பயணத்தின்போது அவர்களை சந்தித்து அறிக்கையை பெறுவேன். பல சம்பவங்களை செவியுற்று மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விடுவார்கள். அதிகமாக விருந்து உபசரிப்பவராக இருந்தார்கள். அங்குள்ள உள்ளூர் வாசிகளிடம் மிகவும் அன்புடனும், நேசத்துடனும் பழகி வந்தார்கள். அதே அன்பின் காரணமாக அவர்கள் வசித்து வந்த அந்த தெரு முஹல்லா வாசிகள் அவர்களை அன்புடன் அம்மா அம்மா என அழைத்து வந்தார்கள். அன்னாருடன் ஆலோசனை கேட்டு வந்தார்கள்.

பெனின் நாட்டின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார். எப்போதும் தனது சந்தாவைப் பற்றி கருத்தில் கொண்டு வந்தார்கள். தவறாமல் சந்தா கொடுத்து வந்தார்கள். போர்த்தோரோவோ ரீஜனின் முபல்லிக் சாஹிபிடம் நீங்கள் இங்கு வந்து சந்தா பெற்றுச் செல்லுங்கள் என்று இரண்டு மூன்று முறை கூறியுள்ளார்கள். எப்போதும் முதலில் வஸிய்யத் சந்தாவையே செலுத்துவார்கள். நான் பைத்துல் புதூஹ் பள்ளிவாசல் விரிவாக்கம் தொடர்பான திட்டம் ஒன்றை சமீபத்தில் அறிவித்திருந்தேன். அதிலும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பங்கு பெற்றிருந்தார்கள். அஹ்மதிய்யா தாருல் இக்ராம் அனாதை இல்லத்தில் மிக ஆர்வத்துடனும் நேசத்துடனும் பற்றுடனும் பணியாற்றி வந்தார்கள். பால்குடி கைக்குழந்தைகளை எப்போதும் சுமந்து வந்தார்கள். எப்போதும் அந்த பிள்ளைகளை கருத்தில் கொண்டு வந்தார்கள். அன்னாரின் மரணத்திற்குப் பிறகு தாருல் இக்ராமின் பிள்ளைகள் இப்போது தான் அனாதையாகி உள்ளார்கள் என நான் கருதுகிறேன்.

அல்லாஹ் அவர்களின் தகுதிகளை உயர்த்துவானாக. அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. பாவமன்னிப்பு வழங்குவானாக. அன்னாரைப் போன்ற நன்றியுணர்வுள்ள அர்ப்பணிப்பின் உயிரோட்டத்தை உணர்ந்த மக்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்கிக் கொண்டே செல்வானாக.

★ ★ ★ ★ ★

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad